இரண்டாம் பகுதி

# விளையாட்டுப் பொம்மை

பிற்சேர்க்கை (ஆசிரியர் பனுவல்)

## விளையாட்டுப் படகு (4+)

செயல்பாட்டு அட்டைகளின் பரிமாற்ற உதவிக்கரம்


கேரள அரசு

**கல்வித் துறை**

தயார் செய்தது

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம் - 695 012

Phone: 0471-2341883, 2340323, e-mail: scertkerala@gmail.com

2020

*Prepared by:*
State Council of Educational Research & Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram -12, Kerala.
E-mail:scertkerala@gmail.com

*Type setting by:*
SCERT Computer Lab.

©
Government of Kerala
Education Department
2019

# ஆசிரியர்களிடம்

மழலையர்ப்பள்ளி கல்வி அரங்கு அறிவியல் பூர்வமாகவும் முழுமையானதாகவும் ஆக்குவதற்கு பல்வேறு செயல்பாடுகள் பொதுக்கல்வி பாதுகாப்பு பணியின் பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எஸ்.ஸி.இ.ஆர்.டி (SCERT) - ன் தலைமையில் கேரள மழலையர்ப்பள்ளிக்கல்விக்கு வழிகாட்டுவதற்காக மழலையர்ப்பள்ளிப் பாடத்திட்டமும் ஆசிரியர் பனுவலான "விளையாட்டுப் பொம்மையும்" காலத்திற்கேற்ப தயார் செய்யப்பட்டுள்ளது. நான்கு வயது நிறைவடையும் போது ஐந்து வளர்ச்சி மண்டலங்களிலாக 87 திறன்களைக் குழந்தை பெற்றிருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மழலையர்ப்பள்ளி செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. குழந்தைக்குப் பழக்கமான சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய 30 மையக்கருத்துகள் வாயிலாகத்தான் ஆசிரியை செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

மழலையர்ப்பள்ளியில் பணிபுரிவோருக்கு மேம்பட்ட உட்பார்வையும் பரிமாற்றத் திறனும் கிடைக்கும் வண்ணம் பின்னூட்ட அமைப்புகளை ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்டதுதான் "விளையாட்டுப் பொம்மை" என்ற ஆசிரியர் பனுவல். மேலும் கேரளத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அங்கீகரிக்கப்பெற்ற மழலையர்ப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு "முன்பயிற்சி" என்ற பெயரில் பயிற்சி வழங்கப்பட்டது. பெற்றோர்களுக்கும் தனி விழிப்புணர்வு வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முன்வாசிப்பு, முன் எழுத்து, முன் கணிதம், நுண்ணிய தசை வளர்ச்சி, படைப்பாற்றல் வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவுகின்ற செயல் அட்டைகள், குழந்தைகளுக்காக 'விளையாட்டுப் படகு" என்னும் பெயரில் மூன்று பகுதிகளாக தயார் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுப் படகின் இரண்டாம் பகுதியில் 11 முதல் 20 வரையுள்ள மையக்கருத்துகள் குழந்தைகளின் வளர்ச்சி மண்டலங்கள், திறன்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. குழந்தையின் வயது, இயல்பு, திறன்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து எவ்வாறு பரிமாற்றம் செய்யலாம் என்பதற்கான தெளிவான வரையறைகளை இந்தக் கையேடு அளிக்கிறது. சுயமாகச் செயல்பாடுகளை உருவாக்குவதற்கும் செயல்பாடு அட்டைகளை மேம்படுத்துவதற்கும் ஆசிரியைக்கு சுதந்திரம் உண்டு. இந்தக் கையேட்டைச் சிறந்த முறையில் பயன்படுத்துவீர்களல்லவா.

வாழ்த்துகளுடன்,

**முனைவர். ஜெ. பிரசாத்**

இயக்குநர்

## படைப்புப் பட்டறையில் செயல்பட்டவர்கள்

1. **அப்துனாசர் யு.கெ**
   விரிவுரையாளர், டயற்று, கோழிக்கோடு
2. **மகேஷ் குமார். எம்**
   ஆசிரியர், எல்.பி.எஸ் செறியாக்கரை, காசர்கோடு
3. **சுரேஷ் பாபு. கெ.கெ.**
   பயிற்சியாளர் (ஓய்வு), எஸ்.எஸ்.எ கண்ணூர்
4. **சைஜ எஸ்.**
   ஆசிரியை, அரசு எல்.பி.எஸ், கோயிப்பாடு, கொல்லம்.
5. **ஷினோஜ் ராஜ்**
   துணை பதிப்பாசிரியர், யுரீக்கா, சாலப்புறம், கோழிக்கோடு.
6. **அனில் குமார். பி.**
   ஜி.எஃப், எல்.பி.எஸ், கும்பள, கோழிக்கோடு
7. **அனிதா குமாரி கெ.பி**
   ஆசிரியை (ஓய்வு), ஏ.சி.கெ.என்.ஜி.யு.பி.எஸ், மேலாங்கோடு, காசர்கோடு.
8. **ஸஜிதா. பி**
   மழலையர்ப்பள்ளி, ஆசிரியை, ஜி.டப்ளியு, எல்.பி.எஸ் அயணிக்காடு, கோழிக்கோடு.
9. **சித்திரஷாலினி. என்.கெ**
   மழலையர்ப்பள்ளி ஆசிரியை, ஜி.ஹச்.எஸ்.எஸ். ராவணேஷ்வர், காசர்கோடு.
10. **ரஸீனா வி.பி**
    மழலையர்ப்பள்ளி ஆசிரியை, அரசு. யு.பி.எஸ், புழதி, கண்ணூர்.
11. **ரஞ்சித் கெ.பி.**
    ஹெச், எஸ்.எஸ்.டி, ஜி.ஹெச்.எஸ்.எஸ், அடூர், காசர்கோடு
12. **ஸுஜயா**
    மிக்ஸட் யு.பி. எஸ். தளாப்பு, கண்ணூர்

## நிபுணர்கள்

1. **முனைவர். ஸி. ராமகிருஷ்ணன்**
   மாநில பாட ஏற்பாடு உயர்மட்டக் குழு உறுப்பினர்.
2. **முனைவர். ஆர். ஜெயபிரகாஷ்**
   உதவிப் பேராசிரியர், குழந்தை நல மருத்துவர், எஸ்.எ.டி மருத்துவமனை, திருவனந்தபுரம்.
3. **முனைவர். டி.பி கலாதரன்**
   ஆலோசகர், எஸ்.எஸ்.கே கேரளம்.
4. **முனைவர். ஆர் பிரசன்ன குமார்.**
   டயற்று முதல்வர் (ஓய்வு).
5. **முனைவர். பி.வி புருஷோத்தமன்**
   விரிவுரையாளர் (ஓய்வு), டயற்று.

## தமிழாக்கம்

1. **ஆர். ரசல் ராஜ்**
   தலைமை ஆசிரியர், எ.எல்.பி.எஸ்
   அருவிக்காடு, மூணார், இடுக்கி, கேரளம்.
2. **ஜூலியட். எல்.**
   எல்.பி.எஸ்.எ தமிழ், அரசு, எஸ்.எஸ்.எல்.பி.எஸ்
   கரமனை திருவனந்தபுரம்.

## நிபுணர்கள்

1. **முனைவர். சாந்தி. பி**
   உதவிப் பேராசிரியர்
   அரசு. மகளிர் கல்லூரி, திருவனந்தபுரம்
2. **முனைவர். பெனடி. கெ**
   உதவிப் பேராசிரியர்
   அரசு கலைக் கல்லூரி, திருவனந்தபுரம்

**கல்விசார் ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி. ஷைலா ஜாஸ்மின். எல்.எஸ்**

(மழலையர்ப்பள்ளி கல்வி அமைப்பு)

ஆராய்ச்சி அதிகாரி எஸ்.ஸி.இ.ஆர்.டி

## விளையாட்டுப் படகு
## பயிற்சித்தாள் பயன்படுத்தும் போது

மையக்கருத்தின் கருத்துப் பரிமாற்றத்தின் முதற் படியாகவோ, குழந்தையின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் போன்றவற்றை ஊக்குவிப்பதாகவோ மையக் கருத்து பரிமாற்றத்திற்குப் பின் குழந்தையின் கருத்து வெளியீடு நடத்துவதற்காகவோ பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். பல்வேறு மையக்கருத்துகளோடு தொடர்பு படுத்தி குறிப்பிட்ட திறன்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும் அனுபவச் செயல்பாடுகளின் தொடர்ச்சியாகவோ, முழுமைப்படுத்துதலாகவோ, மதிப்பிடுவதற்காகவோ இப்பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். சில வாய்ப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- **மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

மையக்கருத்துடன் தொடர்புடைய அனுபவங்களை அளித்தும் தொடர்ச்சியாகவும் இயல்பாகவும் பயிற்சித்தாள் அளித்தும் தொடர்ந்து செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

- **பயிற்சித்தாள் + மையக்கருத்துச் செயல்பாடுகள் → மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக் கருத்துச் செயல்பாடுகள்.**

பயிற்சித்தாளைச் செயல்பாடகவே அளிக்கலாம். அத்துடன் இயல்பாகவே சங்கிலித் தொடராக பிற செயல்பாடுகளைக் கொடுக்கலாம்.

- ஒரு அனுபவக் கருவியாக பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி அலசி ஆராயவும் வளர்ச்சியை வேறுபடுத்தி அறிவதற்கும் உதவும் வகையில் பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். ஒரு குழந்தையின் தொடர்ச்சியான மாற்றத்தைத்தான் மதிப்பிட வேண்டும்.
- குழந்தை ஈடுபடும் செயல்பாடுகளின் செயல்வரிசையை ஆசிரியை உற்று நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- ஒவ்வொரு குழந்தையினுடையவும் வளர்ச்சி மண்டலங்களின் வேகம் வேறுபட்டதாகும். ஆதலால் குழந்தைகளின் வெளியீடுகளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- அளிக்கப்பட்டுள்ள பயிற்சித்தாள்களின் தொடர்ச்சியாகவோ அதன் பிற்சேர்க்கையாகவோ புதிய பயிற்சித்தாளை வடிவமைப்பதற்கான சுதந்திரம் ஆசிரியைக்கு உண்டு.
- குழந்தை பயிற்சித்தாளைப் பூர்த்தி செய்தபின் அதைப் பாதுகாத்தல், மீள்பயன்பாடு போன்றவை குறித்த சரியான அறிவு ஆசிரியைக்கு இருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சித்தாள்களைப் படைப்புத் தொகுப்பில் பாதுகாக்க வேண்டும்.
- பயிற்சித்தாளை முறைப்படியான கற்றல் முறையில் அணுகக் கூடாது.

## பயிற்சித்தாள்கள் – செயல்பாடுகள்

**பல்வேறு வளர்ச்சி மண்டலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சித்தாள்கள் இங்கு தரப்பட்டுள்ளன. கீழே விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.**

### 1. உடல் இயக்க வளர்ச்சி

நுண் தசை வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகள் எல்லா பயிற்சித் தாள்களிலும் அளிக்கப்பட்டுள்ளன. படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்குதல் போன்றவை இந்த வளர்ச்சி மண்டலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பவை. வரைந்து இணைத்தல் வட்டமிடுதல், முன் வரைதல் போன்ற செயல்பாடுகளால் நுண்தசைப் பயிற்சி கிடைக்கிறது. கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், போன்ற அனுபவங்கள் வாயிலாக நுண் தசைகளின் வளர்ச்சி உருவாகிறது.

3+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு நுண் தசைகளின் இயக்கம் குறைவாக இருக்கும். எனவே அவர்களால் செய்ய இயல்கின்ற சிறு சிறு செயல்பாடுகள் தான், விளையாட்டுப் படகில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் பெருந்தசை வளர்ச்சிக்காக ஓடுதல், குதித்தல், படிகள் ஏறி இறங்குதல், ஊர்தல், தவழுதல் போன்ற ஏராளம் அனுபவச் செயல்பாடுகளை வகுப்பறையில் திட்டமிடவேண்டும்.

4+ குழந்தைகளுக்கு இன்னும் அதிகமான நுண் கவனம் தேவையுள்ள செயல்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கத்தரிக்கோல் பயன்படுத்தி துல்லியமாக வெட்டுவதற்கான பயிற்சி. இதற்காக குழந்தை பாதுகாப்பு (child safe) கத்தரிக்கோலைப் பயன்படுத்துவது நன்று. புள்ளிகளை இணைத்து வரைந்து படத்தை முழுமைப்படுத்துதல் தனிப்பட்ட செயல்பாடாகும். ஒன்றாம் வகுப்பில் குழந்தை எழுத்துகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் எல்லாம் எழுத வேண்டும். அதனால் 4+ ல் வைத்து முன் எழுத்துச் செயல்பாடுகள் ஏராளம் அளித்தல் வேண்டும்.

### 2. மொழி வளர்ச்சி

மழலையர்ப்பள்ளி காலகட்டத்தில் உரையாடலுக்கு மிக முக்கிய பங்குண்டு. கூச்சமும் பயமும் இல்லாமல், தயக்கமின்றி பேசுவதற்காக குழந்தைகளைத் திறமையானவர்களாக்க நாம் முயற்சிக்க வேண்டும். அனைத்து பயிற்சித்தாள்களிலும் இதற்கான வாய்ப்பு உள்ளன.

படம் வாசித்தல், இயற்கை நடத்தல், பொம்மை விளையாட்டு, பாத்திர நடிப்பு, விளையாட்டு, பிற அனுபவச் செயல்பாடுகள் போன்றவற்றில் ஒவ்வொரு குழந்தைக்கும் பேசுவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். படங்களில் உள்ள நிகழ்வுகளைச் சொல்லுதல், வரைந்ததும் வண்ணம் தீட்டியதுமான படங்களைப் பற்றிக் கூறுதல், பிறர் வரைந்த படங்களின் கருத்துகளைக் கூறுதல், செய்த காரியங்களின் யுக்தியும் காரிய காரணங்களையும் கூறுதல் போன்ற உரையாடலுக்கான பன்முக வாய்ப்புகள் பயிற்சித்தாள் செயல்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

3+ பருவத்தில் தனது வீட்டில் பேசும் மொழி வாயிலாகத்தான் குழந்தைகள் கருத்துப் பரிமாற்றம் நடத்துவார்கள், இச்சூழலில் கேலிசெய்தல், தடை செய்தல், புறக்கணித்தல் போன்றச் செயல்களை ஆசிரியை செய்தல் கூடாது. அது குழந்தையின் தன்னம்பிக்கையைச் சிதைத்து விடும். பேசுவதற்கான ஊக்குவித்தலை அளித்தல் அவசியம்.

4+ பருவத்திற்கு வரும்போது வழக்கு மொழியின்றி இலக்கிய மொழி வளர்ச்சி அடைவதற்கான மாதிரிகைகளும் அனுபவங்களும் அளித்தல் வேண்டும். இதுபோன்ற வாய்ப்புகளை பயிற்சித்தாளில் வழங்கும் போது கவனத்துடன் பயன்படுத்த நம்மால் இயல வேண்டும். இந்த நிலையில் முன்எழுத்துச் செயல்பாடுகள் வழங்கும் முறையில் விளையாட்டுப் படகில் உள்ள பயிற்சித்தாள்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 3. அறிவுசார் வளர்ச்சி

அறிவியல், கணித மண்டலத்திலுள்ள அனுபவச் செயல்பாடுகள் இம்மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. பெரிது/சிறிது, கூடுதல்/குறைவு, அண்மையில்/தூரத்தில், நீளம் கூடியது/குறைந்தது, உயரம் கூடியது/குறைந்தது போன்ற முன் – கணிதக் கருத்துகள், பொருட்கள், எண்ணுதல், இணைத்தல் போன்றவை உட்படுத்தப் பட்டுள்ளன. வகுப்பறையில் ஏராளம் நேர்முக அனுபவங்களை அளித்த பிறகு தான் பயிற்சித்தாளைப் பயன்படுத்தவேண்டும்.

உற்று நோக்குதல், ஒப்புமைப்படுத்துதல், ஒற்றுமை வேற்றுமைகள் கண்டறிதல், வகைப்படுத்துதல், கண்டுபிடித்த உண்மைகளை வெளியிடுதல் போன்ற செயல் வரிசைத் திறன்களுடன் தொடர்புடைய ஏராளம் செயல்பாடுகள் விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

படங்களை உற்றுநோக்குதல் மட்டுமே பயிற்சித்தாள் வாயிலாகக் கிடைக்கிறது. அதனால் கண்டறிதல், கேட்டறிதல், முகர்ந்து அறிதல், சுவைத்தறிதல், தொட்டு அறிதல் ஆகிய ஐம்புலன்கள் வாயிலான கற்றல் அனுபவங்கள் கிடைக்கும் வகையிலும் திட்டமிட வேண்டும். யுக்திச் சிந்தனை, காரண காரியத் தொடர்புகளைக் கண்டறிந்து கூறுதல், அடுக்குகள் வடிவமைத்தல், பல வகையான உருவாக்கச் செயல்களில் ஈடுபடுதல், நினைவுப்படுத்திக் கூறுதல் போன்ற அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும்.

மூன்று வயதினருக்கு இலகுவான முன் கணிதக் கருத்துகள், நிறங்களைப் பிரித்தறிதல், வேறுபாடு அறிதல், படங்களை உற்று நோக்கி அதிலுள்ள நிகழ்வுகளைக் கூறுதல், ஒரே போலுள்ளவைகளைக் கண்டறிதல், குழுவில் சேராதது கண்டுபிடித்தல், அதன் காரணம் கூறுதல் போன்ற செயல்பாடுகள் தான் தரப்பட்டுள்ளன.

நான்கு வயதினருக்கு இவைகளைவிட உயர்தரச் செயல்பாடுகளுடன் 1 முதல் 5 வரையுள்ள எண்ணறிவோடு தொடர்புடைய செயல்பாடுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குகாகத் தரப்பட்டுள்ள செயல்பாடுகளைத்தழுவி பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தலாம்.

### 4 படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்கல் போன்ற முக்கியமான செயல்பாடுகள் இம்மண்டலத்தோடு தொடர்பு படுத்தி விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன. மொழி வாயிலான படைப்பாற்றலுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

படம் வரைதல் (சுதந்திரமாகவும், கட்டுப்பாட்டுடனும்), வண்ணம் தீட்டுதல் போன்றவை மேலே கூறப்பட்டுள்ளதல்லவா, பல வகையான உருவாக்கல் வாய்ப்புகளை உட்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளன. மணல் படங்கள், விரல் படங்கள், இலை மிருகக் காட்சி சாலை வடிவமைத்தல், பூக்கள் உருவாக்குதல், அடையாள அட்டை தயாரித்தல், கொடி வடிவமைத்தல், தோரணங்கள் தயாரித்தல் போன்று, கைவிரல் பதித்து படம் உருவாக்கல், இலை அச்சு, பஞ்சு, பென்சில் சீவிய துகள் போன்றவற்றை ஒட்டி, படங்களை முழுமைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட உருவாக்குதல் வாய்ப்புகள் விளையாட்டுப் படகில் உள்ளன.

3+ பருவத்தினருக்குத் தகுந்த எளிமையான உருவாக்கல் செயல்பாடுகள் தரப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை வழங்கும் போது படைப்பு மற்றும் அழகியல் மேம்பாட்டுடன் நுண் – பெருந்தசைகளின் பயிற்சிக்கான வாய்ப்புகளும் உண்டல்லவா. மேலும் சமூக – உள வளர்ச்சிக்கும் இவை பயன்படுகின்றன. ஒற்றுமை மனப்பாங்கும், தலைமை தாங்கும் திறன்களும் அடையும் படியான குழுச் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

4+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு சிறிது உயர் தரத்திலான பயிற்சித்தாள் உட்படுத்தப்பட்டுள்ளது. கத்தரிக்கோல் பயன்படுத்தி

வெட்டவும் ஒட்டவும், காகிதம் பயன்படுத்தி பூக்கள், ஓரிகாமி வடிவங்கள் போன்றவை உருவாக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்கள், உபயோகமற்ற பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கச் செயல்பாடுகளைச் செய்ய வைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே குழந்தையின் படைப்பாற்றல் வளர்ச்சி மேம்படும்.

### 5. சமூக உள வளர்ச்சி

'விளையாட்டுப்படகிலுள்ள செயல்பாடுகள்' அனைத்துமே தனிநபர் செயல்பாடாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்க இயலும். வண்ணம் தீட்டுவதற்கான கிரையான்களைக் கொடுத்தும் உருவாக்கச் செயல்பாடுகளில் குழுக்களாகவும் சேர்ந்து ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உருவாகுமல்லவா. சில செயல்பாடுகளில் குறிப்பிட்ட நிறமுள்ள கிரையான் தேவைப்படும். (எடு:) இலைகளுக்குப் பச்சைநிறம் அளித்தல். ஒருவர் வண்ணம் தீட்டி முடியும் வரை காத்து நிற்க குழந்தையை ஊக்குவிக்க ஆசிரியையால் இயலும். கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டும் சூழலிலும் இவ்வாறு காத்து நிற்க வேண்டியது வரும்.

கதைகளில் வரும் மனவெழுச்சிகளைத் தனது மனவெழுச்சிகளுடன் தொடர்பு படுத்துதல் வாயிலாக சமூக உள வளர்ச்சியை உருவாக்க இயலும். பயிற்சித்தாள் வழங்கும் போது கதைக் களம், நிகழ்வு, வகுப்பில் கூறும் கதைகள், பாடல்கள், கதைப் பாடல்கள், பொம்மை நாடகம், பாத்திர நடிப்பு போன்றவை சமூக உள வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தும்போது தான் ஆசிரியை வெற்றி அடைகிறார்.

### மதிப்பீடு

ஒவ்வொரு வளர்ச்சி மண்டலத்திலும் ஒவ்வொரு குழந்தையும் எந்நிலையில் நிற்கிறார்கள் என்பதை ஆசிரியையால் கண்டறிய இயல வேண்டும். குழந்தையின் தனிநபர்த் திறன்களை உணர்ந்து தேவையான ஊக்குவித்தல் அளிக்க இது ஆசிரியருக்கு உதவும். மேலும் தனது திட்டமிடலில் உள்ள குறைகளை உணர்ந்து மேன்மைப்படுத்தவும் மதிப்பிடல் வாயிலாக இயலும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு அளிக்கவேண்டிய உதவிகள் என்னென்ன என்பதைக் குறிப்பிட்டுக் கூறவும் ஆசிரியைக்கு உதவுவது தொடர் மதிப்பீடு வாயிலாகப் பெறும் குறிப்புகள் தான்.

ஒவ்வொரு பயிற்சித்தாள்களிலும் என்னென்ன மதிப்பிட வேண்டும் என்று பனுவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல்பாடுகள் நடக்கும் போது ஆசிரியர் செய்யும் உற்று நோக்கலும் பயிற்சித்தாள் என்ற படைப்பை மதிப்பிடுதல் வாயிலாகவும் தான் தொடர்மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. பெற்றோருடன் உள்ள கலந்துரையாடல் வாயிலாகவும் சில முக்கியமான உற்றுநோக்கல் குறிப்புகள் நமக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பயிற்சித்தாளும் செய்து காட்சிப்படுத்திய பின் குழந்தையின் படைப்புத் தொகுப்புப் பையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதை அலசி ஆராயும் போது குழந்தையின் வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட சீரான வளர்ச்சி ஆசிரியைக்கும் பெற்றோருக்கும் புரிந்து கொள்ள முடியும். ஆண்டிறுதியில் இவைகளை ஒருங்கிணைத்து குழந்தையைக் குறித்துள்ள சரியான மதிப்பிடுதல் தயாராக்க முடியாதா?

குழந்தைக்கும் பெற்றோருக்கும் தேவையான பின்னூட்டம் நடத்தி மேன்மைப் படுத்த இதன் வாயிலாக ஆசிரியைக்கு இயலும்.

# மையக் கருத்து 11 காய்கறிகள்

காய்கறிகளின் வடிவம், நிறம், அளவு போன்றவை குழந்தைகளுக்கு வியப்பூட்டும். சமைத்தும் சமைக்காமலும் அவைகளைச் சுவைத்துப் பார்த்த அனுபவமும் குழந்தைகளுக்கு உண்டு. பலவகையான காய்கறிகள் உள்ளன என்ற கருத்தும், அளவு, வடிவம், சுவை, நிறம் போன்றவற்றில் அவை வேறுபட்டுள்ளன என்ற கருத்தும் குழந்தைகளில் உருவாக்க வேண்டியுள்ளது.

காய்கறிகளுடன் தொடர்புடைய கதை, பாட்டு விளையாட்டுகள் போன்றவை வாயிலாக, ஆரோக்கியத்திற்கு காய்கறிகள் நன்று என்றும் விவசாயம் செய்தே அவைகளை உற்பத்தி செய்கிறோம் என்ற அடிப்படைக் கருத்தை உருவாக்கவும் இந்த மையக்கருத்து வாயிலாக இயல வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. காய்கறி கருத்தாக வரும் கதை –
   நாட்டைச் சுற்றிப்பார்க்க இறங்கிய பூசணி

   ↓
2. பயிற்சித்தாள் 11.1 – "வண்ணம் தீட்டலாம்" வழங்குதல்.

   ↓
3. கதை – பூசணிப் படகும் எலிக்குஞ்சும்.

   ↓
4. பயிற்சித்தாள் 11. 2 – "எலிக்குஞ்சின் பூசணிப் படகுப் பயணம்" – வழங்குதல்.

   ↓
5. பூசணிப்பாடல் (பொம்மை-208), இயற்கையை ரசித்து நடத்தல்.
   (காய்கறித்தோட்டம்/ICT/ மாதிரித் தோட்டம் வடிவமைத்தது).

   ↓
6. பாடல் (தோட்டம் – பொம்மை-208).

   ↓
7. படத்தொகுப்பு தயாரித்தல் (காய்கறியின் படங்கள், ஸ்றாம்பிற்று)

   ↓
8. வகுப்பறையில் ஒரு தோட்டம் (பொம்மலாட்டம் – நடிப்பு, அது போன்ற விளையாட்டு)

   ↓
9. வகுப்பறையில் காய்கறிக்கடை

   ↓
10. குளம் கரை (பழம் வெளியில், காய்கறி உள்ளே – விளையாட்டு)

    ↓
11. வகைப்படுத்தலாம் (பழத்திலிருந்து காய்கறிகளைக் குழுக்களாக்குதல்)

    ↓
12. சலாடு தயாரித்தல், பரிமாறுதல்.

    ↓
13. பொம்மை நாடகம் (காய்கறியின் தனித்தன்மைகளைக் கருத்தாகக் கொண்டு)

    ↓
14. ஒளிந்திருப்பது (பெட்டியின் உள்ளே மறைக்கப்பட்டுள்ள காய்கறியைத் தொட்டுப் பார்த்து பிரித்தறிதல்.)

    ↓
15. காய்கறி அச்சு.

    ↓
16. பழசலாடு விளையாட்டு (காய்கறிகளின் பெயர்களை அளித்து விளையாடுதல்)

    ↓
17. கதை

    ↓
18. நடிப்பு (விவசாயம் செய்தலும் பராமரித்தலும்)

↓

19. பயிற்சித்தாள் 11.3 – “சிறந்தவன் யார்?” வழங்குதல்.

↓

20. ஏணி விளையாட்டு (கட்டத்தில் ஆசிரியர் கூறும் காய்கறியில் குழந்தைகள் குதித்தல்).

## பயிற்சித்தாள் – 11.1 வண்ணம் தீட்டலாம்.

**வளர்ச்சி மண்டலங்கள்**
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு
- மொழிசார் வளர்ச்சி.

**திறன்கள்**
1. கிரையான், ஸ்கெச்பென் போன்றவற்றைப் பயன்படுத்தி சுதந்திரமாக வண்ணம் தீட்ட இயல்கிறது (4).
2. கதாப்பாத்திரத்தை உட்கொண்டு தம்மை வேறொன்றாகக் கற்பனை செய்து கொண்டு பொம்மலாட்டம், பாத்திர நடிப்பு, வேடமிட்டு நடித்தல் ஆகிய சூழல்களில் நடிக்க இயல்கிறது (20).

**கருத்துகள்**
1. பல விதமான காய்கறிகள் உள்ளன.
2. அவை அளவு, வடிவம் நிறத்தில் வேறுபட்டுள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், கிரையான்ஸ்
- சந்து அண்ணனின் தள்ளு வண்டியிலிருந்து நாட்டைச் சுற்றிப்பார்க்க இறங்கிய பூசணி' – கதை கூறிய பின் குழந்தைகளுக்கு பயிற்சித்தாள் வழங்கலாம்.

**கதைக்கூற்று**

“நாட்டைச் சுற்றிப்பார்க்க இறங்கிய பூசணி' பழுத்துப் பழுத்து, கொழு கொழுத்த, மஞ்சள் பூசணிக்கொரு ஆசை, என்ன தெரியுமா? தள்ளு வண்டியில் ஏறி நாட்டைச் சுற்றிப்பார்க்க வேண்டுமாம் – வேறொன்றும் சிந்திக்கவில்லை. உருண்டு உருண்டு பூசணி தள்ளு வண்டியின் அருகே வந்து சேர்ந்தது. பிறகு ஒரே தாவலில் பூசணி தள்ளுவண்டியில் ஏறியது. உருண்டு தாவி ஏறிய களைப்பில் பூசணி சிறிது நேரம் பேசாமல் கிடந்தது.

அப்போது சந்து அண்ணன் வந்தார். வண்டியை தள்ளிக்கொண்டு சந்து அண்ணன் சந்தைக்குப் புறப்பட்டார்.

சந்தையில் வந்துசேர்ந்த பூசணி அங்கேயுள்ள காய்கறிகளைக் கேலி செய்தது. ‘ஐயே...... என்னைப் போல யாருக்கேனும் இப்படி தள்ளு வண்டியில் பயணம் செய்ய முடிந்ததா? ஐயே.... ஐயய்யே....” காய்கறிகளுக்கு கோபம் வந்தது. முதலில் வெள்ளைப் பூசணி வண்டியில் தாவி ஏறியது. இரண்டாவது காபேஜ், பின் புடலங்காய், தர்பூசணி, சேனை, முருங்கைக்காய்.... இவ்வாறு எல்லோரும் தாவி ஏறினர். ஏறியவர்கள் பூசணியுடன் சண்டையிட்டனர். வண்டி குலுங்கியதைப் பார்த்த சந்து அண்ணன் கண்ட காட்சி..... வண்டியில் ஏராளம் காய்கறிகள். அவர்களின் சண்டையைப் பார்த்த சந்து அண்ணன் உரக்கச் சொன்னார். "டேய்....."

பூசணியைத் தவிர அனைத்து காய்கறிகளும் சாடி ஓடினர். பூசணி சந்து அண்ணனை நோக்கிச் சிரித்தது.

“ஓடிப்போடா...” சந்து அண்ணன் பூசணியிடம் கூறினார்.

பாவம் பூசணி வண்டியிலிருந்து இறங்கி ஓடியது.
ஊரைச் சுற்றிப் பார்க்க வந்த பூசணியைப் பார்க்க வேண்டாமா?

- **பயிற்சித்தாள் 11.1** – வண்ணம் தீட்டலாம் வழங்குதல்.
  - தனிநபராக வண்ணம் தீட்டுதல்.
  - வண்ணம் தீட்டியதை ஒருவருக்கொருவர் பார்க்க வாய்ப்பு அளித்தல்.
  - யார் யாருடைய படங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்தது.?
  - தேவையான மாற்றங்கள்/மேன்மைப்படுத்துதல்.
  - பூசணியின் படத்தின் பின்பக்கம் கார்டுபோர்டு/ சார்ட்டு ஒட்டுதல். கம்பு ஒட்ட வைத்து கைப்பாவை (puppet) உருவாக்குகிறார்கள்.
- **கதைக்கூற்று (தொடர்ச்சி)**
  - சந்து அண்ணனின் தள்ளுவண்டியிலிருந்து இறங்கி ஓடிய பூசணி எங்கு சென்றிருக்கும்?
  - பிற காய்கறி நண்பர்கள் பூசணியைப் பார்த்திருக்குமா?
  - பார்க்கும் போது என்ன கூறுவார்கள்? நண்பர்களே சொல்லிப் பாருங்கள்........
- ஆசிரியைக்கு
  - கிரையான்ஸ் பயன்படுத்தி வண்ணம் தீட்ட முறையாக அறிவுறுத்த வேண்டும். முதலில் ஓரத்தில் பின்னர் உட்பகுதியில். (அடர்த்தியாகவும் அடர்த்தி குறைத்தும் வண்ணம் தீட்டும் முறையைப் பழக்கப்படுத்த வேண்டும்.)

## மதிப்பீடு

- தகுந்த வண்ணம் தீட்டியுள்ளனர்.
- சூழலுக்கேற்ப நடித்துக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 11.2 – எலிக்குஞ்சின் பூசணிப் படகுப் பயணம்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- சமூக – உள வளர்ச்சி
- மொழிசார் வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன்கள்**
1. படங்கள், பொருட்கள், இயற்கை ஆகியவை பார்த்து (முன்வாசிப்பு) கருத்துகள் கூற இயல்தல் (14).
2. படக்கதைகள் உற்று நோக்கி கதையை ஊகித்துக் கூற இயல்தல் (18).

**கருத்து**
- காய்கறிகள், வடிவத்திலும் அளவிலும் வேறுபட்டுள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்**
- ஊரைச் சுற்றிப் பார்க்க இறங்கிய பூசணியின் கதை கூறிய பின், பூசணியின் கட்அவுட்டுக்கு வண்ணம் தீட்டி குழந்தைகள் கைப்பாவை (puppet) உருவாக்குகிறார்கள்.

**செயல்முறை**

- கதைக்கூற்று (தொடர்ச்சி)

  சந்து அண்ணனின் வண்டியிலிருந்து தாவி இறங்கி ஓடிய பூசணி, பயணத்தின் போது எலிக்குஞ்சைப் பார்க்கிறது என்ற சூழலில் கதையை விரிவுபடுத்திக் கூறுதல்.
- **பயிற்சித்தாள் 11.2** – “எலிக்குஞ்சின் பூசணிப் படகுப் பயணம்” வழங்குதல்

  படங்களை உற்றுப்பார்க்க குழந்தைகளுக்கு வாய்ப்பு அளித்தல்.
  - எலிக்குஞ்சும் பூசணியும் ஒருவருக்கொருவர் என்னென்ன பேசியிருப்பார்கள்?

- கதையில் சில நிகழ்ச்சிகளை ஆசிரியை கேட்டல். குழந்தைகள் அதன் படங்களைத் தொட்டுக் காட்டுதல்.
- கதையை ஊகித்துக் கூறுதல்.
- ஆசிரியை பயிற்சித்தாளில் உள்ள கதையைக் கூறுதல். (கற்பனையுடன்).
  (எலிக்குஞ்சிற்கு அம்மாவிடம் சென்று சேர வேண்டும். நதியைக் கடந்து செல்ல பூசணி உதவுகிறது).
- பயணத்தின் இறுதியில் இருவரும் பிரியும் போது எலிக்குஞ்சு என்ன கூறியிருக்கும்?

- படத்திலுள்ள எலிக்குஞ்சுக்கும் பூசணிக்கும் வண்ணம் தீட்டுதல்.
- மிகவும் அழகாக வண்ணம் தீட்டியது யார்?
- குழந்தைகள் ஒருவருக்கொருவர் பயிற்சித்தாளை கைமாற்றிப் பார்த்தல் – மதிப்பிடுதல்.
- வண்ணம் தீட்டிய பிறகு கதையை மீண்டும் கூறுவதற்கான வாய்ப்பு அளித்தல்.

## மதிப்பீடு

- தகுந்த வண்ணம் தீட்டியுள்ளனர்.
- படத்தை உற்று நோக்கி கதையை ஊகித்துக் கூற இயல்தல்.

## பயிற்சித்தாள் 11.3 சிறந்தவன் யார்?

**வளர்ச்சி மண்டலம்** • அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்**

1. ஐம்புலன்கள் வாயிலாக பொருட்கள்/ உயிரினங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி சிறப்பியல்புகளைக் கண்டுபிடிக்கவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (நிறம், அளவு, வடிவம், மணம், ஒலி, சுவை, பளபளப்பு) (30).
2. படங்கள், பொருட்கள், இயற்கை ஆகியவற்றைப் பார்த்து (முன்வாசிப்பு) கருத்துகள் கூற இயல்கிறது (14).

**கருத்து** : காய்கறிகள் வீட்டில் நட்டு வளர்ப்பதுண்டு. கொடிகளிலும் செடிகளிலும் காய்கறிகள் விளைகின்றன.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்

**சூழல்** : விவசாயத்தைப் பராமரித்தல் – முறை குழந்தைகள் நடிக்கிறார்கள். தொடர்ந்து காய்கறித் தோட்டத்தின் படத்தை ஆசிரியை காட்சிப்படுத்துதல். தோட்டத்திலுள்ள காய்கறிகளைக் குறித்து குழந்தைகளிடம் கேட்டல். குழந்தைகள் பதில் கூறுதல்.

**செயல்முறை**

• கதைக்கூற்று

- ஒரு ஊரில் இரண்டு காய்கறிகள் வாழ்ந்து வந்தன. அன்றாடம் ஒருவருக்கொருவர் பெருமை கூறிக்கொள்வதே இவர்கள் வேலை. உருண்டிருப்பதால் எனக்குத் தான் அழகு.
  நான் தான் பெரியவன். நானே கெட்டிக்காரன் என்று தர்பூசணி கூறுமாம்.

"உருண்டை போல உருண்டு
வட்டமாகக் குதித்து
எங்கும் ஓடி நான் சென்றிடுவேன்"
இதைக் கேட்கும் போது பாகற்காய்க்கு
கோபம் வரும்.
"நான் அல்லவா உன்னை விட
கெட்டிக்காரன்,
பெரியவன், அழகன்"
பாகற்காயும் சொல்லும்.
"நீண்டு உருண்டு
வட்டமாகக் குதித்து
எங்கும் ஓடி நானும் செல்வேன்"
புடலங்காயும் விட்டுக் கொடுக்காது.

இதைக் கேட்கும் போது தர்ப்பூசணி மீண்டும் பெருமை பேசத் தொடங்கும். அதற்குப் பதிலாக பாகற்காய் மீண்டும் பெருமை பேசத் தொடங்கும்.

அப்படியாகத் தோட்டத்திலுள்ள எல்லா காய்கறிகளும் பெருமை பேசத் துவங்கின. நீங்களும் கூறிப் பாருங்கள்.

**பயிற்சித்தாள் 11.3** - சிறந்தவன் யார்? வழங்குதல்

- பூசணியினுடையவும் புடலங்காயினுடையவும் பெருமையைக் குழந்தைகளே கூறட்டும். பிற காய்கறிகளின் பெருமை கூறுதலையும் அவர்களே கூறட்டும்.
- படத்திற்கு குழந்தைகள் தகுந்த வண்ணம் தீட்டுதல்.
- பூசணியினுடையவும் புடலங்காயினுடையவும் தனித்தன்மைகளை ஒவ்வொருவராகக் கூறுதல்.
- கைப்பாவை (puppet) செய்து பெருமை கூறுதல்.

- வண்ணம் தீட்டிய பயிற்சித்தாள்களை ஒருவருக்கொருவர் பார்வையிடல்.
- மிகவும் சிறப்பாக/அழகாக வண்ணம் தீட்டியது யார்?

## மதிப்பீடு

- காய்கறிகளின் தனித்தன்மைகளைக் கூற இயல்கிறது.

# மையக் கருத்து 12 காந்திஜெயந்தி

காந்தித் தாத்தாவை குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். காந்தியடிகளைக் குறித்து பாடல்கள், கதைகள் வாயிலாக கூடுதல் தகவல்கள் அறிய இந்த மையக்கருத்தின் செயல்பாடுகள் உதவும். காந்திஜெயந்தி தினத்தையொட்டி பாடசாலையைத் தூய்மை செய்யவும் அலங்கரிக்கவும் இனிப்பு வழங்கவும் பிற ஆயத்தச் செயல்பாடுகளைப் பார்க்கவும் இச்செயல்பாடுகளில் தங்களால் இயன்ற அளவு பங்கேற்கவும் குழந்தைகளுக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதே இந்த மையக்கருத்தின் நோக்கம்.

## செயல்பாட்டு வரிசை

1. பாடல் – காந்தித்தாத்தா

↓

2. பயிற்சித்தாள் 12.1 – “அடையாள அட்டை தயாரிப்போம்” வழங்குதல்.

↓

3. பள்ளியை அலங்கரிப்பதற்குத் தேவையான பொருட்கள் தயாரித்தல் (இலை, காகிதம், வண்ணங்கள்).

↓

4. நினைவுப்படுத்திக் கூறுவோம் – அலங்கரிக்கும் பொருட்கள்.

↓

5. மழலையர்ப்பள்ளி அலங்கரித்தல்.

↓

6. ஊர்வலம்.

## பயிற்சித்தாள் – 12.1“அடையாள அட்டை தயாரிப்போம்”

**வளர்ச்சி மண்டலங்கள்** • உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**

1. காந்திஜெயந்தியோடு தொடர்புடைய படங்கள் வரைந்து வண்ணம் தீட்டுதல் (5).
2. காந்திஜெயந்தியோடு தொடர்புடைய கதைகள், பாடல்கள் கேட்டல் / கூறுதல்.

**கருத்துகள்**

1. காந்திஜெயந்தி, குழந்தைகள் தினம் போன்ற தினங்கள் பள்ளிகளில் கொண்டாடுவதுண்டு.
2. விழாக்கள் தொடர்பாக வீடும் சுற்றுப்புறமும் பள்ளியும் அலங்கரிப்பதுண்டு.

**கருவிகள்**

- பென்சில், கிரையான்ஸ்.
- காந்தியடியின் புகைப்படம் காட்சிப்படுத்துதல். காந்தியடியின் பிறந்தநாள் அக்டோபர் – 2 என நினைவுப்படுத்துதல்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

காந்திஜெயந்தி தினத்தன்று பாயசம் குடிக்கும் போது கண்ணனுக்கு அம்மா கூறியது நினைவிற்கு வந்தது: “மகனே, முழுவதும் சாப்பிடவேண்டும். உணவை வீணாக்கக் கூடாது. தேவையானது மட்டும் எடுத்துச் சாப்பிட வேண்டும்.”

“கண்ணா, என்ன...... பாயசம் குடிக்கவில்லையா? ஆசிரியை கேட்டார். கண்ணன் பாயசம் குடிக்கத் தொடங்கினான். குடித்தவர்கள் குடித்தவர்கள் தம்ளரைக் கழுவி வைத்தனர். பிறகு அவர்கள் வகுப்பறையையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்யத் தொடங்கினர்.

“இவ்வாறு ஏன் சுத்தம் செய்கின்றனர் என்று தெரியுமா குழந்தைகளே?'' ஆசிரியை எல்லோரிடமும் கேட்டார். யாரும் எதுவும் கூறவில்லை.

நம்முடைய சுற்றுப்புறத்தை எப்போதும் சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்.

சுத்தம் செய்வது என்பது காந்தித் தாத்தாவின் நல்லொழுக்கங்களில் ஒன்றாகும்.

சுத்தம் செய்து கொண்டிருந்தபோது கண்ணனுக்கு இரண்டு பென்சிலும் ஒரு அழிப்பானும் கிடைத்தது. அவன் அதை ஆசிரியையிடம் கொடுத்தான்.

ஒரு முறை, எழுதுவதற்காக மகாத்மா காந்தி ஒரு துண்டுப் பென்சிலைத் தேடியெடுத்த கதை உங்களுக்குத் தெரியுமா? ஆசிரியை கேட்டார்.

- கதை

துண்டுப் பென்சிலின் கதையை ஆசிரியை கூறுதல். (ICT –ன் உதவியுடனும் வெளியிடலாம்)

- பயிற்சித்தாள் 12.1 – “அடையாள அட்டை தயாரிப்போம்.”

அடையாள அட்டையின் ஒரு பகுதியை புள்ளிகள் போட்டு வரைந்து முழுமையாக்குதல். பெயரெழுதுதல்.

அட்டைக்கு வண்ணமும் அளிக்க வேண்டும். விருப்பமுள்ள எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் அடையாள அட்டை தயாரிக்கலாம்.

ஆசிரியைக்கு

- அடையாள அட்டை செய்வதற்கு நகல்கள் எடுத்து வழங்கலாம்.

## மதிப்பீடு

- காந்தியோடு தொடர்புடைய கதைகளையும் பாடல்களையும் கவனமாகக் கேட்டல்.
- படத்தை முழுமையாக்கி வண்ணம் தீட்ட இயல்கிறது.

# மையக் கருத்து 13 உயிரினங்கள், வளர்ப்பு விலங்குகள், வளர்ப்புப் பறவைகள்

வீட்டில் வளர்க்கின்ற உயிரினங்களைக் குறித்தும் அவைகளின் பயன்களைக் குறித்தும் சில அறிவுகள் குழந்தைகளுக்கு உண்டு. அதை விரிவாக்கம் செய்யவும் உயிரினங்களை பராமரிப்பதற்கான மனநிலையை உருவாக்கவும் இந்த மையக்கருத்து வாயிலாக இயல வேண்டும். பல வளர்ச்சி மண்டலங்களை வளர்த்தும் செயல்பாடுகளுடன் கருத்துருவாக்கமும் நடக்க வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. வளர்ப்பு விலங்குகள் மையக்கருத்தாக வரும் கதை கூறுதல்.
↓
2. போலச் செய்தல் (ஒலி)
↓
3. போலச் செய்தல் விளையாட்டு
↓
4. பயற்சித்தாள் 13.1 "உயிரினங்களை வரைவோம்" வழங்குதல்.
↓
5. குழுப்பாடல் (வினாவிடைப் பாடல் – பொம்மை பக்கம் 215)
↓
6. படம் வரைதல்
↓
7. ஒற்றுமை வேற்றுமை (பறவை/விலங்கு)
↓
8. பெருமை பேசுதல்.
↓
9. பயிற்சித்தாள் 13.2 – "வரைந்து இணைப்போம்" வழங்குதல்.
↓
10. களப்பயணம்
↓
11. தூவல் தொகுப்பு
↓
12. உயிரினங்களைப் பராமரித்தல்.
↓
13. பொம்மை விளையாட்டு.
↓
14. பயிற்சித்தாள் 13.3 – 'எதற்காக?' வழங்குதல்.
↓
15. விடுகதை
↓
16. பொம்மை செய்தல் விளையாட்டு.
↓
17. பயிற்சித்தாள் 13.4 – "குறும்புக்கார குஞ்சுகளைக் காப்பாற்றுங்கள்" வழங்குதல்.

## பயிற்சித்தாள் – 13.1 உயிரினங்களை வரைவோம்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்**
1. சுதந்திரமாகப் படங்கள் வரைந்து வண்ணம் தீட்ட இயல்தல் (கிரையான்ஸ், ஸ்கெச்பென்) (5).
2. இயற்கையை ரசிக்கவும் ஓவியங்கள் வாயிலாக

வெளிப்படுத்தவும் வண்ணம் தீட்டவும் முடிகின்றது (80).

**கருத்து** பசு, ஆடு, நாய், பூனை, முயல், கோழி போன்ற உயிரினங்களை வீட்டில் வளர்க்கிறோம்.

**கருவிகள்**
- பென்சில், கிரையான்ஸ், ஸ்கெச்பென்

**சூழல்**
- உயிரினங்களோடு தொடர்புடைய பாடல்கள் பாடிய பின்னர்.

**செயல்முறை**

- பாடல்
- எங்கள் வீட்டில் கோழியுண்டு
  கோழிக்கு கால்கள் இரண்டாமே
  எங்கள் வீட்டில் பசுவுண்டு
  பசுவுக்கு கால்கள் நான்காமே
  ................................................................................
  ................................................................................"

குழந்தைகள் பிற உயிரினங்களின் பெயர்களை இணைத்து புதுவரிகள் உருவாக்கிப் பாடுதல், கால்களுக்குப் பதிலாக கண், காது வால் போன்றவற்றை இணைத்தும் வரிகளை மாற்றிப் பாடட்டும்.

ஒவ்வொருவருக்கும் விருப்பமான உயிரினங்களைக் குறித்துக் கூற வாய்ப்பு அளித்தல்.

மைமிங் (ஊமை நடிப்பு) : உயிரினங்களின் அசைவுகளை ஊமை நடிப்பாக நடித்து வெளியிட்ட பின்னர்.

பயிற்சித்தாள் 13.1 – "உயிரினங்களை வரைவோம்" வழங்குதல்.

- விருப்பமுள்ள இரண்டு உயிரினங்களை சுதந்திரமாக வரைதல்.
- வண்ணம் தீட்டுதல்.
- வரைந்த படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- வரைந்த உயிரினத்தின் ஒவ்வொரு தனித்தன்மைகளையும் கூறுதல்.

## மதிப்பீடு

- சுதந்திரமாக ஓவியங்கள் வரைய இயல்கிறது.
- வரைந்த ஓவியங்களுக்குத் தகுந்த வண்ணம் அளித்து அழகுபடுத்தப்பட்டுள்ளது.
- விருப்பமான உயிரினங்களைக் குறித்து தயக்கமின்றி கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 13.2 வரைந்து இணைப்போம்.

**வளர்ச்சி மண்டலம்**
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**
- வீட்டில் வளர்க்கும் விலங்குகள், காட்டு விலங்குகள், வளர்ப்புப் பறவைகள், காட்டுப் பறவைகள் போன்றவற்றைப் பிரித்தறியவும் தனித்தன்மைகள் கூறவும் அவைகளின் வாழ்விடங்களைப் பிரித்தறிந்து கூறவும் இயல்தல் (34).

**கருத்துகள்**
1. பசு, ஆடு, காளை, நாய், பூனை போன்றவற்றை வீட்டில் வளர்க்கின்றோம்.
2. வளர்ப்பு விலங்குகளால் பயன்கள் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், பென்சில்

**சூழல்**
- வீட்டில் உள்ள விலங்குகள், காட்டு விலங்குகள் போன்றவற்றைக் குறித்த கலந்துரையாடலுக்குப் பின்னர்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

**நரியின் திருமணம்**

மழையும் வெயிலும் ஒன்றாக வந்தது. ஹாய்.... ஊரிலுள்ள எல்லா நரிகளுக்கும் திருமணம் நடந்தது. ஃபோக்ஸி நரியின் திருமணம். நண்பர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தனர். அனைவரையும், அழைக்க வேண்டும், காட்டிலுள்ள எல்லா விலங்குகளையும் அழைத்தனர். பிறகு ஊருக்கு வந்தனர். எல்லா வீட்டு விலங்குகளையும் அழைத்தனர். “நாங்கள் வீட்டு விலங்குகள் காட்டில் நிகழும் திருமணத்திற்கு வந்தால் தொந்தரவு செய்வார்களா?'' பசுவும், ஆடும், பிற விலங்குகளும் கேட்டன.

''இல்லை வெவ்வேறு பந்தலில் அமரச் செய்யலாம்.”

குரங்கண்ணன் எல்லோரையும் வரவேற்றது. (நடிப்பு – “இது யார்? யானை அக்காவா?” வாருங்கள், அமருங்கள்.....” என்ற முறையில்) வீட்டு விலங்குகள் ஒரு பந்தலிலும் காட்டு விலங்குகள் வேறொரு பந்தலிலும்.

பசுவைக் கண்டதும் சிங்கத்திற்கு ஆசை வந்தது. “திருமணத்தை அலங்கோலமாக்காதே..” கரடி நினைவுப்படுத்தியது.

சிங்கம் ஒத்துக்கொண்டது.

இனி விருந்து. அதன் பிறகு திருமணம்.

எல்லோரும் வயிறு நிறைய விருந்துண்டனர். வயிறு நிறைந்ததும் வீட்டு விலங்குகள் ஊருக்கும் காட்டுவிலங்குகள் காட்டுக்கும் திரும்பினர்.

- பயிற்சித்தாள் 13.2 – ‘வரைந்து இணைப்போம்’ வழங்குதல்.
  - படத்தில் யாரெல்லாம்?
  - ஒவ்வொரு விலங்கும் எங்கே போயிருக்கும்?
  - வழி வரைந்து இணைத்தல்.

**கதைக் கூற்று**

(தொடர்ச்சி)

திருமண விருந்து முடிந்ததும் எல்லோரும் சென்று விட்டார்களே, ஆனால் ஒரு விஷயம் எல்லோரும் மறந்துவிட்டனர். என்ன விஷயம் மறந்திருப்பார்கள்? நரியின் திருமண முகூர்த்தமாகும்போது ஒரு உயிரினம் கூட அங்கில்லை. நரி மாமா ஊளையிட்டது. நரி மாமியும் ஊளையிட்டது. எல்லா நரிகளும் ஒன்று சேர்ந்து ஊளையிட்டன. என்னவென்று விசாரிக்க அங்கே யார் உள்ளனர்? நரி தாலி கட்டியது. அப்போது யார் குரவை இடுவார்? பறவைகள் கேட்டன. மீண்டும் அவைகள் ஊளையிட்டன. நரிகள் இப்போதும் இரவாகும் போது ஊளையிடும். விருந்துண்டு சென்றவர்களை அழைக்கவே..... கேட்பவர்கள் கூட கேட்டோம் என்று காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

## மதிப்பீடு

- காட்டு விலங்குகளுடையவும் நாட்டு விலங்குகளுடையவும் வாழ்விடங்களைப் பிரித்தறிந்து வரைந்து இணைக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் 13.3 – எதற்காக?

**வளர்ச்சி மண்டலம்** • அறிவுசார் வளர்ச்சி

**திறன்** • கண்டுபிடிப்புச் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் துணையுடன் பொது முடிவுகள் வெளியிடவும் இயல்தல் (31).

**கருத்துகள்**

1. பசு, ஆடு, காளை, நாய், பூனை போன்றவற்றை வீட்டில் வளர்க்கின்றோம்.
2. வளர்ப்பு விலங்குகளால் பயன்கள் உள்ளன.

**கருவிகள்** • பயிற்சித்தாள், பென்சில்

**சூழல்** : வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள், அவைகளின் பயன்கள் போன்றவைகளைக் கூறிய பின்னர் செயல்பாடுகள் வழங்குதல்.

**செயல்முறை**

- பாடல் – வளர்ப்பு விலங்குகள்/பொம்மை பக்கம் (212) பாடுதல், குழந்தைகள் சேர்ந்து பாடுதல்.
- கலந்துரையாடல் – பாடிய பிறகு உயிரினங்களைக் குறித்து வினவுதல். “பசுவை எதற்காக வளர்த்துகிறோம்?” இவ்வாறு வினாக்கள் வாயிலாக பாட்டிலுள்ள கருத்துகளைப் பழக்கப்படுத்துதல்.

பயிற்சித்தாள் 13.3 – ‘எதற்காக?’ வழங்குதல்.

- படத்தின் இடது பக்கத்திலுள்ளவை எவையெல்லாம்?
- வலது பக்கத்திலுள்ளவை எவையெல்லாம்? ஒவ்வொரு உயிரினத்தின் பயன்களை வரைந்து இணைப்போம்.
- கூறுதல்.

ஆசிரியைக்கு : இரசிக்கத் தக்கச் செயல்பாடுகளை வழங்க வேண்டும். குறிப்பாக கதைக்கூற்று இல்லாத சூழலில்.

### மதிப்பீடு

- உயிரினங்களையும் அவற்றின் பயன்களையும் சரியாக வரைந்து இணைக்க இயல்கிறது.
- உயிரினங்களையும் அவற்றின் பயன்களையும் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 13.4 – குறும்புக்காரக் குஞ்சுகளைக் காப்பாற்றுங்கள்

**வளர்ச்சி மண்டலம்** • உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : முன்னெழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் (13).

**கருத்து** : சில பறவைகளை வீட்டில் வளர்க்கின்றோம்.

**கருவிகள்** : பயிற்சித்தாள், பென்சில்

**சூழல்** : வீட்டில் வளர்த்தும் பறவைகளைக் குறித்து கூறிய பிறகு செயல்பாட்டில் நுழைதல்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

ஓர் இடத்தில் ஒரு வெள்ளைத் தாய்க்கோழியும் ஏழு குறும்புக் குஞ்சுகளும் இருந்தன. தாய்க்கோழி கூறுவது எதையும் குஞ்சுகள் கேட்பதில்லை. அந்தப் பக்கமாக நடக்கச் சொன்னால் இந்தப் பக்கமாக நடப்பார்கள். இந்தப் பக்கமாக நடக்கச் சொன்னால் அந்தப் பக்கம்....... பொறுக்க முடியாமல் தாய்க்கோழி

தினமும் கொக்கக்கோ கொக்கரக்கோ என்று அலறி அழும். ஒரு நாள் பக்கத்திலுள்ள மாமரத்தின் கிளையில் செம்பருந்தும் நண்பர்களும் வந்தனர். வந்ததும் அவர்கள். ஙீ..... ஙீ...... ஙீ..... என்ற குஞ்சுகளின் அழுகைக் குரலைக் கேட்டனர். பார்த்த போதோ..... நிறைய குஞ்சுக் கோழிகள். மாவின் கிளையில் பருந்துகளைக் கண்ட தாய்க்கோழி உரக்கக் கூறியது. "விரைவில் கூண்டுக்குள் ஏறுங்கள் குழந்தைகளே." குழந்தைகளாவது ஏறுவதாவது? அவைகள் சொல் பேச்சு கேட்கவில்லை. "அம்மா வேண்டுமானால் ஏறுங்கள்" அவைகள் கூறின. பாவம் தாய்க்கோழி என்ன செய்யும்? செம்பருந்து பறந்து வந்தது. "பட பட" சத்தம் கேட்டு தாய்க்கோழி அலறியது. "கொக்கரக்கோ கொக்கரக்கோ....'' பருந்து கூர்மையான நகத்துடன் தாழ்வாகப் பறந்தது, ஒரு கோழிக்குஞ்சைப் பிடிக்கப் பார்த்தது. அப்போதுதான் கோழிக்குஞ்சுகளுக்கு ஆபத்து என்னவென்று புரிந்தது. அவைகள் பயந்தன. பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் கோழிக்குஞ்சுகளை வீட்டில் கொண்டு சேர்ப்போமா?

- பயிற்சித்தாள் 13.4 – 'குறும்புக்காரக் குஞ்சுகளைக் காப்பாற்றுங்கள்'' வழங்குதல்.
- படவாசிப்பு
  - படத்தில் என்னென்ன?
  - கோழிக்குஞ்சுகளைக் கூட்டில் சேர்ப்பதற்கான வழி வரைதல்.

## மதிப்பீடு

- தவறின்றி வழி வரைக்க இயன்றுள்ளது.

# மையக் கருத்து 14 வனவிலங்குகள்

காட்டில் பலவித விலங்குகள் உயிர்வாழ்கின்றன என்ற கருத்து உருவாக வேண்டும். சிறியதும் பெரியதுமான பிராணிகளும் தாவர உணவு உண்கின்ற விலங்குகளும் மாமிச உணவு உண்கின்ற விலங்குகளும் வன விலங்குகளில் உட்படுகின்றன என்ற கருத்தும் இம்மையக் கருத்து வாயிலாகப் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. யானை தலையைக் குலுக்கி, காதுகளை அசைத்து, ஆடி ஆடி வரட்டும். (விளையாட்டு - அசைவைப் போலச் செய்தல்).

↓

2. கொளாஷ் செய்தல். (மரங்கள்).

↓

3. பயிற்சித்தாள் 14.1 - "புள்ளிகளை இணையுங்கள்" வழங்குதல்.

↓

4. பாட்டு பாடுதல் (ஒரு விரல் ஆடும் போது)

↓

5. விளையாட்டு - எத்தனை எத்தனை?

↓

6. காணொளியைப் பார்த்து, பார்த்தவற்றின் தொடர்பைக் காரிய காரணத்துடன் தொடர்புபடுத்திக் கூறுதல்.

↓

7. கதை (பாத்திர நடிப்பு, படம் வரைதல், நடிப்பு).

↓

8. படத்தொகுப்பு தயாரித்தல். (வன விலங்குகள்/வீட்டில் வளர்க்கும் விலங்குகள்/வீட்டில் வளர்க்கும் பறவைகள்).

↓

9. பயிற்சித்தாள் 14.2 'ஜிக்ஸோ பசில்' அளித்தல்.

↓

10. எளிய உடற்பயிற்சி விளையாட்டு (இடது கை, வலது கை, இரு கைகள் வரிசை வரிசையாக உயர்த்துவோம்).

↓

11. விலங்குகளின் உருவங்கள் செய்வோம்.

↓

12. மொத்தம் எத்தனை? (5-ற்கு குறைவான எண்ணிக்கை, கண்டறிதல்).

↓

13. இலை மிருகக்காட்சி சாலை.

↓

14. குழுப்பாடல், வாய்த்தாரை, வினா விடைப் பாடல்.

↓

15. பயிற்சித்தாள் 14.3 - "படத்தைப் பார்த்துக் கதை கூறுவோம்" வழங்குதல்.

## பயிற்சித்தாள் - 14.1 - புள்ளிகளை இணையுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்**
- முன் எழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபட இயல்கிறது (13).

**கருத்து**
- காட்டில் பல விதமான விலங்குகள் வாழ்கின்றன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், பென்சில், கிரையான்ஸ்.

**சூழல்**
- காட்டில் வாழும் விலங்குகள், அவற்றின் வாழிடங்கள் இவைகளைக் குறித்துள்ள கலந்துரையாடலுக்குப் பிறகு.

செயல்முறை

- கதைக்கூற்று : காகம் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது. மரத்தின் உயர்ந்த கிளையில் அதற்கொரு கூடு உள்ளது. அங்கே தான் காகம் முட்டை போடும். ஆனால் இரைதேடச் சென்றுவிட்டு திரும்பி கூட்டிற்கு வந்தபோது ஒரு முட்டை கூட அங்கில்லை.
முட்டையெல்லாம் எங்கே? காகம் வருந்தியது. அவ்வாறிருக்கும் போது காகம் முட்டைக்குக் காவலாக குரங்கை நியமித்தது. குரங்கு மரமெல்லாம் ஏறி இறங்குமல்லவா? இருந்தும்...... ஒரு நாள் அதோ முட்டைத் திருடன் வருகிறான். யாராக இருக்கும்? சுதந்திர பிரதிபலிப்பு.

பயிற்சித்தாள் 14.1 – “புள்ளிகளை இணையுங்கள்” வழங்குதல்.

படவாசிப்பு
- மரத்தில் யார் யார்?
- புள்ளிகளை இணைத்தல்.
- வண்ணம் தீட்டுதல்.

கதைக்கூற்று (தொடர்ச்சி) அது பெரிய ஒரு பாம்பாக இருந்தது. பாம்பு மரத்தில் ஏறுவதைக் குரங்கு பார்த்தது. மெல்ல மெல்ல பாம்பு மரத்தின் அருகே ஊர்ந்து வந்தது. பின்னர் மீண்டும் மெதுவாக ஊர்ந்து ஊர்ந்து மரத்தில் ஏறியது. அட..... திருட்டுப் பாம்பே.... குரங்கு உரக்கக் கத்தியது. பின்னர் என்ன நிகழ்ந்திருக்கும்? சொல்லிப் பார்ப்போமா? இதையெல்லாம் பார்த்துக்கொண்டு காட்டின் அமைச்சர் புலியும், புலியின் நண்பன் கரடியும் மரத்திலேயே இருந்தனர். கூச்சல் கேட்ட ஒரு பருந்தும் பறந்து வந்து மரக்கிளையில் அமர்ந்தது. எல்லோரும் சேர்ந்து பாம்பை விரட்டினர். வேறு வழியின்றி பாம்பும் கீழே இறங்கியது. வேகமாக ஊர்ந்து தப்பித்தது. காகம் நிம்மதி அடைந்தது.

## மதிப்பீடு

- புள்ளிகளை இணைக்க இயல்கிறது.
- தகுந்த வண்ணம் தீட்ட இயல்கிறது.
- மரத்தில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 14.2 – ஜிக்ஸோ பசில்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**
1 பொருளின் பகுதிகளுக்கும் முழுமையான பொருளுக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்க இயல்கிறது (40).
2. கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்ட இயல்கிறது (7).

**கருத்து**
- காட்டில் பல விதமான விலங்குகள் வாழ்கின்றன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், பென்சில், கத்தரிக்கோல், பசை

**சூழல்**
- பலவிதமான விலங்குகளைக் குறித்துக் கூறுதல். வீட்டில் வளர்க்கும் விலங்குகள், காட்டில் வாழும் விலங்குகள், அவைகளின்

தனித்தன்மைகள் போன்றவற்றைக் குறித்துள்ள கலந்துரையாடலுக்குப் பிறகு.

**செயல்முறை**

- கதைக்கூற்று — அம்முவிற்கு ஒரு யானையின் படம் கிடைத்தது. அவள் தினமும் அப்படத்தை எடுப்பாள். பார்த்துக்கொண்டே இருப்பாள். குட்டியானையிடம் வெவ்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பாள். ஒரு நாள் அம்மு படத்தைப் பார்த்துக்கொண்டே பழம் தின்று கொண்டிருந்தாள். அப்போது குட்டியானை தும்பிக்கையை நீட்டியது. அம்மு ஒரு பழத்தைக் கொடுத்தாள். மறுநாள் அம்மு வெளியில் சென்ற பின் வீட்டிலுள்ள சிறுமி, யானையின் படத்தை எடுத்தாள். குட்டியானை கொம்பைக் குலுக்கியது. சிறுமி கத்தரிக்கோலால் தும்பிக்கையை வெட்டினாள். மீண்டும் படத்தைத் துண்டு துண்டாக்கினாள். திரும்பி வந்த அம்மு அழத்தொடங்கினாள். வெட்டப்பட்டத் துண்டுகளைச் சேர்த்து யானையை உருவாக்கி அம்முவிற்குக் கொடுப்போமா?
- பயிற்சித்தாள் 14.2 – 'ஜிக்ஸோ பசில்' அளித்தல்.

  பயிற்சித்தாளில் பல இடங்களில் காண்கின்ற உடல் பகுதிகளை வெட்டியெடுத்து தரையில் முறைப்படுத்தி யானையின் படம் வடிவமைப்போமா?
- ஆசிரியைக்கு – பயிற்சித்தாள் நகல் எடுத்து செயல்பாடு செய்ய வேண்டும்.

## மதிப்பீடு

- துண்டுகளை வெட்டி எடுக்கிறார்கள்.
- தரையில் முறைப் படுத்துகிறார்கள்.

## பயிற்சித்தாள் 14.3 – 'படத்தைப் பார்த்துக் கதை கூறுவோம்'

**வளர்ச்சி மண்டலம்** • மொழி வளர்ச்சி

**திறன்** • படங்கள், பொருட்கள், இயற்கை ஆகியவற்றைப் பார்த்து (முன் வாசித்தல்) கருத்துகள் கூற இயல்கிறது (14).

**கருத்து** • காட்டில் பலவிதமான விலங்குகள் உள்ளன.

**கருவி** • கதைப்படம்

**சூழல்** • வன விலங்குகளைக் குறித்துக் கூறிக்கொண்டு கதைப்படத்தைப் பழக்கப்படுத்துதல்.

**செயல்முறை**

- பயிற்சித்தாள் 14.3 – 'படத்தைப் பார்த்துக் கதை கூறுவோம்' வழங்குதல்.
- படவாசிப்பு
  - யாரெல்லாம் படத்தில் இருக்கிறார்கள்?
  - அங்கே என்ன நிகழ்கிறது?
- கதை கூறுதல்
  - குழந்தைகள் படத்தைப் பார்த்து சுயமாகக் கதை கூறுதல்.
- கதைக் கூற்று
  - ஆசிரியை கதையை வரிசையாக வெளியிடுதல். பட பட படோ... பெரிய சத்தம். என்னென்னவோ இடிந்து விழுகிறது. மரங்கள் ஆடி அசைகிறது. மண் இடிந்து விழுகிறது. அனைத்து விலங்குகளும் பயந்தன. "நமது மலையை மனிதர்கள் இடித்துக்கொண்டு செல்கின்றனர்." நரி கூறியது.

ஐயோ ! என்ன செய்வோம்? எல்லோரும் பயந்தனர். 'மரங்களையெல்லாம் வெட்டி எடுக்கின்றனர்.' கிளிகள் கூறின.

மூங்கில் காட்டிலிருந்து பெண்யானைகள் (பிடியானைகள்) வந்தன.

''நாம் ஒன்றுபட்டால் நமது மலையைக் காப்பாற்றலாம்."

நமக்கிங்கே நலமாக வாழவும் செய்யலாம். யானைகள் கூறின.

"அதற்கு என்ன வழி?" விலங்குகள் கேட்டன.

'வழியுண்டு.' யானை கூறியது.

யானை, சிறுத்தை, கரடி, காட்டெருமை, நரி, மான், கீரி, பாம்பு, பறவைகள்.... எல்லாம் ஊர்வலமாக மலையை இடிப்பவர்களின் அருகே சென்றன. யானை பிளிறியது. நரி ஊளையிட்டது, சிறுத்தை கோபத்துடன் உறுமியது. பாம்புகள் கூட்டமாக ஊர்ந்து வந்தன. பறவைகள் தலையில் கொத்தின.

'ஐயோ காப்பாற்றுங்கள்'

மலையை இடித்துக்கொண்டிருந்த மனிதர்கள் ஓடித் தப்பித்தனர். எல்லா விலங்குகளும் உரக்கச் சிரித்தன. இனி இங்கெல்லாம் வெட்டப்பட்ட மரங்களின் கன்றுகளை நட வேண்டும். நமக்கும் சுகமாக வாழவும் செய்யலாம்." விலங்குகள் ஒரே குரலில் கூறின.

ஆசிரியைக்கு : குழந்தைகளைக் கொண்டு கதை உருவாக்கும் முறையில் ஒவ்வொரு காட்சிக்கும் தகுந்த கேள்விகள் கேட்டு செயல்பாடு செய்யலாம்.

## மதிப்பீடு

- படம் பார்த்து சுயமாக கதை கூற இயல்கிறது.

## மையக் கருத்து 15 மண், வேளாண்மை

செடிகள் மண்ணில் வளர்கின்றன. மண்புழு, எறும்பு, கரையான், குழியானை போன்ற உயிரினங்கள் மண்ணில் உள்ளன. மனிதர்கள் பலவிதமான வேளாண்மை செய்கிறார்கள். விதைகள் விதைத்தும் கம்புகள் ஊன்றியும் வேளாண்மை செய்கிறார்கள். வேளாண்மை செய்யக் கருவிகள் தேவையாகும். விலங்குகள், இயந்திரங்கள் போன்றவை வேளாண்மைக்கு உதவுகின்றன.

### செயல்பாட்டு வரிசை

1. மண்ணைப் பயன்படுத்தி விளையாடுதல் (பூந்திட்டு விளையாட்டு- விசில் ஊதிய பிறகு குறிப்பிட்ட நேரத்திற்குள் கையில் மண்ணை அள்ளி எடுத்து சிறிய குவியல் அமைத்தல்.

↓

2. மண்ணில் வரைதல். (மணல் தட்டு/ தரையில் – மணலில், படம் வரைதல், – குதிங்கால் ஊன்றி/மண்ணில் வட்டம் வரைதல், வட்டத்தை உயிரினங்களின் படமாக மாற்றுதல்)

↓

3. மணல் படம் தயாரித்தல் (செடியின் படம்/எல்லைக்கோடுகளில் பசை தேய்த்து மணல் தூவி தயாரித்தல்) – வண்ணம் அளித்தல்.

↓

4. மணலில் கட்அவுட்டு செடி நடுதல் (செடிகளின் கட்அவுட்டுகளை அளித்தல். விழாமல் நிறுத்த முடியுமா? மண் குவியல்கள் அமைத்து கட்அவுட்டை நிலை நிறுத்துதல்)

↓

5. செடிகள் எங்கெல்லாம்? (கலந்துரையாடல், நட்புக் கலந்துரையாடல் போன்றவற்றிற்குப் பிறகு மரங்கள் எங்கே? வண்ணம் தீட்டுதல் மரம் வரைதல், வரைந்து இணைத்தல்).

↓

6. மண்ணைக் குறித்த பாடல் – “ஆஹா! நல்ல சிறுதரி மணல். புன்னகை தூவும் சிறுதரி மணல்.”

↓

7. மண்ணைக் குழைத்தல், உருவங்கள் உருவாக்கலாம். மண் அப்பம் செய்து விளையாடலாம். (1–3 எண்ணிக்கை)

↓

8. பயிற்சித்தாள் 15.1 – ‘மண்ணிலுள்ள நண்பர்கள்’ வழங்குதல்.

↓

9. பள்ளியின் சுற்றுப்புறத்தில் என்னென்ன செடிகள்? என்னென்ன வேளாண்மை?

↓

10. படக் கண்காட்சி (ஸ்லைடு ஷோ/சார்ட்டு) / இயற்கையை உற்று நோக்கி நடத்தல்.

↓

11. வேளாண்மை பெயர்கள் கூறுதல்.

↓

12. பயிற்சித்தாள் 15.2 – “நாமும் வேளாண்மை செய்வோம், வழங்குதல்.

↓

13. வேளாண்மை நிலத்தில் என்னென்ன உயிரினங்கள்? / வேளாண் கருவிகள் (ஐ.சி.டி)

↓

14. படங்களைக் காண்பிக்கும் போது பெயர்/பயன் கூறுதல்.

↓

15. மணல் தட்டில் அமைப்போம் (சேனை/வாழைக்குலை) பாடல் பாடலாம். ஏற்று பாடலாம்.

↓

16. வீட்டில் செய்யும் வேளாண்மை (நட்புக் கலந்துரையாடல்)

↓

17. வேளாண்மை பாடல்கள் பாடுதல் (பொம்மை பக்கம் 214)

↓

18. பயிற்சித்தாள் 15.3 – 'கூட்டு வேளாண்மை' வழங்குதல்.

## பயிற்சித்தாள் – 15.1 மண்ணிலுள்ள நண்பர்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- மொழி வளர்ச்சி
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**

1 பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்றுப்பார்த்து தகவல்களையும் கண்டு பிடிப்புகளையும் வெளியிட இயல்கிறது (21).

2 ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள் உயிரினங்கள் ஆகியவற்றை உற்றுநோக்கி சிறப்பியல்புகளைக் கண்டு பிடிக்கவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது (30).

**கருத்து**
- மண்ணில் உயிரினங்கள் உள்ளன.

**கருவிகள்** : உயிரினங்களை உற்றுநோக்கும் கருவி (கைலென்ஸ்)

**சூழல்**
- மண் குழைப்போம், உருவங்கள் உருவாக்குவோம் செயல்பாட்டிற்குப் பிறகு.

**செயல்முறை**

- கதைக்கூற்று : கோழி அம்மா மண்ணைக் கிளறியது. குஞ்சுகள் சுற்றி நின்றன. "அதோ ஒரு பாம்பு!" கோழிக் குஞ்சு சொன்னது. மற்ற குஞ்சுகள் பயந்தன. "எங்கே?" தாய்க்கோழி கேட்டது. அதோ அந்த இலையின் அடியில்.'' தாய்க்கோழி இலையைத் திருப்பிப் போட்டது. கையும் இல்லை காலும் இல்லை. வளைந்து நெளிந்து கிடக்கிறது. தலையுண்டு, வாலுண்டு, நீண்ட உடம்பும் உண்டு. என்றாலும் இது பாம்பு அல்ல. ''என்றால் இது யார்?'' ''மண்புழு, மண்புழுவே தான்". மண்புழு கடிக்காது. "எங்கே பார்க்கட்டும்?" கோழிக்குஞ்சுகள் வட்டமிட்டன. ஐயோ! அதைக் காணவில்லை! "அம்மா, அது மண்ணாகி விட்டது. "மண்ணாகி விடவில்லை மண்ணிலுள்ள சிறிய துளைக்குள் நுழைந்து விட்டது."அம்மா கூறினாள். "மண்புழுவைத் தின்னலாமா?" ஒரு கோழிக்குஞ்சு கேட்டது. "தின்னலாமே!" "எனக்கு மண்புழு வேண்டும்." எனக்கும் வேண்டும்." எல்லோரும் கேட்டனர். தாய்க்கோழி கிளறிப் பார்த்தது. மண்புழு கிடைக்கவில்லை. ''எல்லோரும் வாங்க, போகலாம்" அவைகள் நடந்தன. அவைகள் சென்றதும் மண்புழு மெல்ல தலையை நீட்டியது. திரும்பிப் பார்த்த கோழிக்குஞ்சு அதைப் பார்த்தது. ஓடிச் சென்று கொத்தி இழுக்க இழுக்க மீண்டும் மீண்டும் வந்து கொண்டேயிருந்தது.

மற்ற குஞ்சுகளும் வந்தன. 'ஏலேலோ ஐலசா.....' ஒற்றுமையுடன் இழுத்தன. மண்புழு வெளியே வந்தது. ''அம்மா இதற்கு கால் இல்லை.'' ''அம்மா, இதற்கு வால் இல்லை.'' அம்மா

இதற்குச் சிறகு இல்லை "இதன் வாய் எங்கே?" கோழிக் குஞ்சுகளுக்கு சந்தேகம்! "அதெல்லாம் அப்புறம் கூறுகிறேன். காகம் எடுத்துச் செல்லும் முன் சாப்பிடலாம்."
கோழி அம்மா குஞ்சுகளுக்கு மண்ணிரை பிரியாணி சமைத்துக் கொடுத்தது.

பயிற்சிதாள் 15.1 – 'மண்ணிலுள்ள நண்பர்கள்' வழங்குதல்.

கேட்ட கதையிலுள்ள எந்த நிகழ்வுகள் படத்தில் உள்ளன எனக் குழந்தைகள் கூறட்டும். கதையை முழுமையாகச் சொல்ல வைக்கலாம். மண்புழுவும் கோழிக்குஞ்சும் உரையாடுவதும் ஆகலாம். மண்புழுவைத் தின்ற பிறகு கோழிக்குஞ்சுகள் கேட்டன:
"அம்மா, மண்ணிற்குள் வேறு உயிரினங்கள் உண்டா?" "உண்டல்லவா" "என்னெவெல்லாம்?" "நான் பிறகு காட்டித் தருகிறேன்."
குழந்தைகளிடம் – உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டல், கை ஆடி (லென்ஸ்) யின் உதவியுடன் மண்ணிலுள்ள சிறு உயிரினங்களை உற்று நோக்குதல். அந்த உயிரினங்களின் தனித்தன்மைகளைக் கூறுதல்.

ஆசிரியைக்கு : படத்தில் உள்ள தனித்தன்மைகள் கூறுதல் என்பது தான் திறன். அதனால் 3 படங்களையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு குழந்தைகளைக் கொண்டும் கூற வைக்க வேண்டும். அதனுடன் மண்புழுவின் பிரதிபலிப்பும் ஆகலாம்,

## மதிப்பீடு

- கதையைக் கவனமாகக் கேட்டு கதையின் நிகழ்வுகளைப் படம் பார்த்துக் கூற இயல்கிறது.
- மண்ணிலுள்ள உயிரினங்களை உற்று நோக்கி தனித்தன்மைகள் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 15.2 – நாமும் வேளாண்மை செய்வோம்

**வளர்ச்சி மண்டலம்**
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**
1. படங்கள், பொருட்கள், இயற்கை ஆகியவற்றைப் பார்த்து (முன்வாசிப்பு) கருத்துகள் கூற இயல்கிறது (14).
2. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்றுப்பார்த்து தகவல்களையும் கண்டுபிடிப்புகளையும் வெளியிட இயல்கிறது (21).

**கருத்துகள்**
1. மனிதன் பல விதமான வேளாண்மையைச் செய்கிறான்.
2. வேளாண்மை செய்யக் கருவிகள் தேவை.
3. விலங்குகள், இயந்திரங்கள் போன்றவை வேளாண்மை செய்ய உதவுகிறது.

**சூழல்** : இயற்கையை உற்றுப் பார்த்து நடத்தல், வேளாண் பெயர் கூறுதல் போன்ற செயல்பாடுகளுக்குப் பிறகு.

**கருவிகள்**
- பயற்சித்தாள், படங்கள்

- கதைக்கூற்று : "அம்மா, அம்மா நமக்குப் போதுமான அளவு அரிசியும் சோறும் வீட்டுக்காரர்கள் தருவதில்லையே! ஒரு பிடி அரிசி தான் தருகிறார்கள்" கோழிக் குஞ்சு அம்மாவிடம்

புகார் சொன்னது. ''நாமும் வேளாண்மை செய்வோம்.'' அரிசி உற்பத்தி செய்யலாம். வயிறு நிரம்பத் தின்னலாம். 'வேறொரு கோழிக் குஞ்சு கூறியது.

"அது சரிதான்."

"எப்படி வேளாண்மை செய்வது?" வாங்க.

"வயலுக்குச் சென்று நாம் பார்த்துப் படிப்போம்" தாய்க்கோழியும் குஞ்சுகளும் வரிசை வரிசையாக வயலை நோக்கி நடந்தன. (குழந்தைகள் வரிசை வரிசையாக நடக்க வேண்டும். கை வீசி நடந்தன. கால்கள் நீட்டி வைத்து நடந்தன.) நடிப்பு.

அவர்கள் வயல் வரம்பில் சென்று சேர்ந்தனர். டர்ர்ர்..... டர்ர்ர்.... வயலில் ஒரு வாகனம் ஓட்டுகிறார்கள். அதற்குப் பின்னால் நிறைய கொக்குகள். கொக்குகளைப் பார்த்துப் பயந்து வாகனம் ஓடுவது போல் தோன்றும். "அந்த வண்டியின் பெயரென்ன அம்மா? "டிராக்டர்!" டாக்டர் மருத்துவமனையில் அல்லவா இருப்பார்? சின்னக்குஞ்சுக்கோழிக்கு சந்தேகம். 'டாக்டர்' அல்ல. 'டிராக்டர்' அம்மா தெளிவாக உச்சரித்துக் கூறியது. (குழந்தைகளும் கூறட்டும்) கொக்குகள் டிராக்டருக்குப் பின்னால் ஏன் நடக்கிறது? "டிராக்டரின் பின்பக்கம் பாருங்கள். மண்ணை உழுது போடுவது பார்த்தீர்களா? அப்போது வெளியில் வரக்கூடிய சிறு உயிரினங்களைக் கொத்தித் தின்னும்." மண்ணை உழுத பின்னர் என்ன செய்வார்கள்? "விதை விதைப்பார்கள்" அம்மா சொன்னது. நம்மால் வேளாண்மை செய்ய முடியாது. ஒரு கோழிக்குஞ்சு கூறியது. "ஏன் அப்படி?" வேறொரு கோழிக் குஞ்சு கேட்டது.

"நமக்கு டிராக்டர் இல்லையே."

''அது பரவாயில்லை. கொம்பன் காளையானாலும் போதும்''. தாய்க்கோழி சொன்னது.

அவைகள் கொம்பன் காளையின் பக்கத்தில் சென்றன: "கொம்பன் அண்ணே, கொம்பன் அண்ணே எங்களுக்கு உதவி செய்வீர்களா?"

''எனக்கென்ன தருவீர்கள்?'' கொம்பன் கேட்டான்,

"முட்டை தரலாம்."

''ஹ......ஹ....ஹ...'' கொம்பன் வாய்விட்டுச் சிரித்தது. "நான் முட்டை சாப்பிட மாட்டேன்" வைக்கோலெல்லாம் நீ எடுத்துக்கொள்! என தாய்க்கோழி கூறியது. கொம்பன் ஒத்துக் கொண்டது." அவைகள் கூட்டு வேளாண்மை செய்தன. அவைகள் வேளாண்மை செய்வதைப் பாருங்கள்.

பயிற்சித்தாள் 15.2 – "நாமும் வேளாண்மை செய்வோம்" வழங்குதல்.

- படவாசிப்பு
  - படத்தில் என்னென்ன பார்க்கிறீர்கள்?
  - ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துகள் கூறுதல்.
- வேளாண் பாடல்
  - பொம்மை பக்கம் 214 ல் உள்ள பாடல் பாடுதல்

## மதிப்பீடு

- படங்களை உற்று நோக்கி கருத்துகளைப் புரிந்து கொண்டு பகிர்ந்து கொள்ள இயல்கிறது.

- வேளாண் வேலைகளில் விலங்குகள், இயந்திரங்கள் போன்றவற்றின் பயன்கள் என்னென்ன என்பதைக் கூற இயல்கிறது.
- வேளாண்மை செய்யும் முறைகளைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 15.3 – 'கூட்டு வேளாண்மை'

**வளர்ச்சி மண்டலங்கள்**
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**
1. கதைப் படத்தை உற்று நோக்கி கதையை ஊகித்துக் கூற இயல்கிறது (19).
2. சுயமாக கதைகள், உருவாக்கவும் சொல்லவும் கதாப்பாத்திரங்களை நடித்துக் காட்டவும் இயல்கிறது (74).

**கருத்துகள்**
1. மனிதன் பல விதமான வேளாண்மை செய்கிறான்.
2. விதைகள் விதைத்தும் கம்புகள் ஊன்றியும் வேளாண்மை செய்யலாம்.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : வேளாண் பாடல்கள் பாடிய பிறகு.

**செயல்முறை** : குட்டன் அணிலும் குளக்கோழியும் வாழை நட்ட கதையின் முதற்பகுதியை மட்டும் வகுப்பில் அறிமுகப்படுத்துதல்.

பயிற்சித்தாள் 15:3 – 'கூட்டு வேளாண்மை' வழங்குதல்.

- படத்தைப் பார்த்துக் கதையை ஊகித்துக் கூறுதல்
  - முதல் படத்தைப் பாருங்கள். இதில் யார் யார் உள்ளனர்? அவர்கள் என்ன செய்கின்றனர்? ஏன் அவ்வாறு செய்கிறார்கள்? அவர்களுக்குப் பெயர் சூட்டுவோமா? இது ஒரு கதை. ஒரு இடத்தில் ஒரு..... மீதியை யாரால் சொல்ல முடியும்? இதன் தொடர்ச்சியை யாரால் கூற முடியும்? இவ்வாறு குறிப்புகள் அளித்து குழந்தைகளைக் கொண்டே கதையைச் சொல்ல வைக்க வேண்டும்.
- பட வாசிப்பு
  - படத்தில் என்னென்ன?
  - சேனை விவசாயம் செய்து முடித்த பிறகு அணிலுக்கும் கோழிக்கும் என்ன கிடைத்தது?
  - வாழை விவசாயத்தின் முடிவிலோ?
  - மணல் தட்டு பயன்படுத்தி கதை கூறுதல்.
  - நீங்களாக இருந்தால் ஒவ்வொரு முறையும் என்ன செய்வீர்கள்? கேள்வி கேட்டல்.
  - சுதந்திர பிரதிபலிப்பு
  - வாழை விவசாயத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்.

## மதிப்பீடு

- கதைப்படம் பார்த்து படத்தை விளக்கிக் கூற இயல்கிறது.
- சேனை விவசாயத்திலும், வாழை விவசாயத்திலும் விளைபலன் என்ன என்று கண்டறிந்து கூற இயல்கிறது.
- வாழை விவசாயத்திற்குத் தகுந்த வண்ணம் தீட்ட இயல்கிறது.

## மையக் கருத்து 16 தொழில்

அப்பாவும் அம்மாவும் தன்னுடைய சுற்றுவட்டாரத்திலுள்ளவர்களும் பற்பல தொழில்களைச் செய்கிறார்கள் என்று குழந்தைக்குத் தெரியும். வேளாண்மை என்ற மையக்கருத்தோடு தொடர்புடைய தொழில்களைக் குறித்தும் தொழிற்கருவிகளைக் குறித்துள்ள குழந்தையினுடைய முன்னறிவுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டு ‘தொழில்’ என்ற மையக்கருத்தோடு தொடர்புடைய செயல்பாடுகள் திட்டமிடவும் பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தவும் வேண்டும்.

தங்களுடைய வீடுகளில் பல தொழில்களில் ஈடுபடும் நபர்கள் உள்ளனர் என்றும் ஒவ்வொரு தொழிலுக்கும் பல்வேறு கருவிகள் பயன்படுத்துகிறார்கள் என்றும் குழந்தைக்குத் தெரியும். வீட்டிலும் சமையல் அறையிலும் பயன்படுத்தும் கருவிகள்/தொழிற்கருவிகளை வியப்புடன் உற்றுப்பார்க்கவும் பயன்படுத்தவும் குழந்தைக்குத் தூண்டுதல் கொடுக்க வேண்டும். வேளாண்மை, வீட்டு வேலை, உருவாக்கச் செயல்பாடுகள் போன்ற ஒவ்வொரு தொழிலிற்கும் உழைப்பு தேவையாகும் என்றும் தொழில் செய்யும்போது கிடைக்கும் கூலி வருவாய்க்கான வழியாகும் என்ற அறிவும் பெற வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. குரும்பை எடுத்தல் விளையாட்டு.

↓

2. குரும்பை – ஸ்டெதெஸ்கோப் உருவாக்குதல்.

↓

3. கதை கேட்போம் – வயல் உழுத ஈ (பொம்மை பக்கம் 196).

↓

4. பயிற்சித்தாள் 16.1 “தொழில் செய்யும் இடம் எது?” வழங்குதல்.

↓

5. தொழில் பாடல் (உங்களுடைய நாட்டிலெல்லாம்.......).

↓

6. கருவிகள் என்னென்ன? (ஒட்டிச் சேர்த்தல்).

↓

7. வீட்டில் உள்ள வேலைகள் (மின்னட்டை).

↓

8. பயிற்சித்தாள் 16.2 – ‘சமையலறையில் உதவுபவர்கள்’ வழங்குதல்.

↓

9. சேர்ந்து பாடுவோம்........ (சமையலறைக் கருவிகளோடு தொடர்புடைய விடை கூறலாம், சிறு கவிதைகள், விடுகதை, பழமொழிகள்).

↓

10. கருவிகள் உருவாக்குவோம் (களிமண், உப்பு+மைதா).

↓

11. ஆணி அடிப்போம் – பிடுங்கி எடுப்போம் (ஸ்குரு, சுத்தியல், ஸ்குருடிரைவர் பயன்படுத்துதல்).

↓

12. கதை கேட்போம் – வெட்டுக்கிளியும் எறும்பும் பக்கம் (197).

↓

13. சமையலறையில் உள்ள உழைப்பு (வேடமிட்டு விளையாடுதல்/ போலச் செய்தல் விளையாட்டு/அது போன்று செயல்பாட்டு விளையாடல் (கருவிகள் கிற்று).

↓

14. வேலை செய்தால் – கூலி. களச்சி/குரும்பை பொறுக்குதல் – விளையாட்டு (கூடுதல் கூலி கிடைத்தது யாருக்கு).

↓

15. வீடு கட்டுவதைப் பார்ப்போம் /வயலுக்குச் செல்வோம். (ஏதாவது தொழில் செய்யும் இடத்தைப் பார்வையிடுதல்).

↓

16. வீடு கட்ட என்னென்ன வேலை? (நெகிழிக் கட்டைகளைப் பயன்படுத்தி வீடு கட்டுதல்).

↓

17. பாடல் பாடுவோம் – (என் வீடு.... நல்ல வீடு).

↓

18. எனக்கு என்னென்ன வேண்டும்? தீப்பெட்டி, ஈர்க்கில், கார்டுபோர்டு பிற பொருட்கள் பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்கள் செய்வோம்.

↓

19. தொழில், தொழிற்கருவிகள் இவைகளின் படங்களைத் திரட்டி படத்தொகுப்பு தயாரிப்போம்.

## பயிற்சித்தாள் – 16.1 தொழில் செய்யும் இடம் எது?

**வளர்ச்சி மண்டலங்கள்**
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**
1. பார்த்தும் கேட்டும் புரிந்து கொண்ட நிகழ்வுகள், தகவல்கள், கதைகள் ஆகியவற்றில் கருத்து இழப்பீடு இல்லாமல் பிறருடன் பகிர்ந்து கொள்ள இயல்கிறது (16).
2. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்றுப் பார்த்து தகவல்களையும் கண்டு பிடிப்புகளையும் வெளியிட இயல்கிறது (21).

**கருத்து**
1. நமது நாட்டில் பல தொழில்கள் செய்பவர்கள் உள்ளனர்.
2. ஒவ்வொரு தொழிலோடுத் தொடர்புடைய தொழில் இடங்களும் தொழிற்கருவிகளும் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள்

**சூழல்**
- 'வயல் உழுத ஈ' என்ற கதையைக் கூறிய பிறகு. (பொம்மை பக்கம் 197)

**செயல் வரிசை**

கலந்துரையாடல்
- காளை எங்கே சென்றது? எதற்காகச் சென்றது? நிலத்தை உழுவது எதற்காக? காளையின் வேலை என்ன? நிலத்தை உழுவதற்கு உதவி செய்வது எது? இது போன்ற வேளாண் வேலைகளைப் பற்றிய நட்புக் கலந்துரையாடல்.

பயிற்சித்தாள் 16.1 – 'தொழில் செய்யும் இடம் எது? வழங்குதல்.

படவாசிப்பு
- படத்தில் யாரெல்லாம்? என்னவெல்லாம்?
- என்னென்ன தொழில் செய்கிறவர்கள்?
- என்னென்ன கருவிகள்?

## மதிப்பீடு

- படத்தை உற்று நோக்கி தொழில்கள், தொழிற்கருவிகள், தொழில் செய்யும் இடம் போன்றவற்றைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 16.2 சமையலறையில் உதவுபவர்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவுசார் வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**
1. சுற்றுப்புறங்களிலுள்ள பொருட்கள், நிகழ்வுகள், தனது அனுபவங்கள், நிலைமைகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகள் இவற்றைச் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் ஒன்றோடொன்று தொடர்பு படுத்திக் கூற இயலும் (22).
2. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்றுப் பார்த்து தகவல்களையும்

கண்டு பிடிப்புகளையும் வெளியிட இயல்கிறது (21).

**கருத்து**
- தொழில் செய்வதற்கு தொழில் கருவிகள் தேவை.

**கருவிகள்**
- பிளக்கார்டு, பயிற்சித்தாள், ஸ்கெட்ச் பென்.

**சூழல்**
- பல தொழில்களைப் பார்க்கும் போது மிகவும் முக்கியமான தொழில் வீட்டிலுள்ள வேலைகள், வீட்டிலுள்ள வேலைகளோடு தொடர்புடைய மின்னட்டைகள்- செயல்பாடு 7- ன் தொடர்ச்சியாக பயிற்சித்தாள் பயன்படுத்த வேண்டும். இப்பயற்சித்தாள் பயன்படுத்துவதன் வாயிலாக செயல்பாடு - 9 ன் விடுகதை அறிமுகம் செய்யவும் 10-ன் கருவிகள் உருவாக்க உதவுவதாகவும் அமையும் (ஆயத்தம்).

**செயல்வரிசை**
- வீட்டிலுள்ள வேலைகளோடு தொடர்புள்ள மின்னட்டைகளை 2 வீதம் 4 குழுக்களுக்கு அளித்தல்.

குழு 1
- மிக்ஸியில்/அம்மியில் அரைத்தல். அப்பா தரையை சுத்தம் செய்தல்.

குழு 2
- அப்பா துணி சலவை செய்தல். அம்மா உரல்/ கிரைண்டர் இயக்குதல்.

குழு 3
- அப்பா துணி சலவை செய்தல். அம்மா செடிக்கு நீர் பாய்ச்சுதல்.

குழு 4
- அப்பா தேங்காய் உரித்தல். அம்மா தேய்ப்பு பெட்டியால் துணி தேய்த்தல்.

ஒவ்வொரு குழுவும் கிடைத்த கார்டுகளை உற்றுக் கவனித்தல்.

- படத்தில் என்ன?
- யார் வேலை செய்கிறார்? (அப்பா/அம்மா)
- என்னென்ன கருவிகளை ஒவ்வொரு தொழிலிலும் பயன்படுத்துகிறார்கள்?
- படத்திலுள்ள நிகழ்வுகளை நடித்தல்.

குழுக்கள் கூறுவதை ஆசிரியை மெகா்ஃபோன் செய்தல்.

**நட்புக் கலந்துரையாடல்**

- அம்மாவும் அப்பாவும் வேலைகள் செய்யும்போது நீங்கள் அவர்களுக்கு உதவி செய்வீர்களா?
- வீட்டிலுள்ள வேலைகளை எல்லோரும் சேர்ந்துதானா செய்கிறீர்கள்?

தொடர்ந்து பயிற்சித்தாள் 16.2 – 'சமையலறையில் உதவுபவர்கள்' வழங்குதல்.

- என்னென்ன கருவிகள் படத்தில் உள்ளன?
- சமையல் அறையில் உள்ள கருவிகளை சமையல் அறைக்குக் கொண்டு செல்லுங்கள்.
- ஒவ்வொரு கருவிகளும் எவ்வாறு உதவுகின்றன என்று கூறுதல். ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- இணைக்காத படங்களின் காரணம் கூறுதல். (எடு: பிக்காஸ் – மண்ணைக் கொத்துதல்)

## மதிப்பீடு

- சமையல் அறையில்/வீட்டில் பயன்படுத்தும் கருவிகள் அவற்றின் பயன்களைப் பிரித்தறிந்து இணைக்க இயல்கிறது.
- ஒவ்வொரு கருவியினுடையவும் பயனைப் பிரித்தறிந்து கூற இயல்கிறது.

# மையக் கருத்து 17 குழந்தைகள் தினம்

நேரு மாமா குழந்தைகளுக்கு விருப்பமான நண்பர் ஆவார். நேரு மாமாவின் குழந்தைப் பருவத்திலுள்ள அனுபவங்களை எளிய கதை வடிவில் அறிமுகம் செய்தால், குழந்தைகளின் மனதில் பதியும். நேரு மாமாவின் ஆடைகள், ரோஜாப்பூ போன்றவைகளை விரும்புவதற்கான வாய்ப்புகள் பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக வழங்கலாம். கதைகள் கேட்டு இரசிப்பதுடன் நண்பர்களை நேசிப்பதற்கான மன நிலையும் குழந்தைகளில் உருவாக வேண்டும். நேருவின் பிறந்த நாள் கொண்டாட்டச் செயல்பாடுகளில் பங்கேற்று நட்புடனும் குழுவில் பொறுப்புடனும் நடந்து கொள்வதற்கான வாய்ப்பையும் உருவாக்க வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. குழந்தைகள் தினத்தைப் பற்றிய பாடல்.

↓

2. பயிற்சித்தாள் 17.1 – 'தோரணம் முழுமையாக்குவோம், அலங்கரிப்போம்' வழங்குதல்.

↓

3. அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், அலங்கரித்தல்.

## பயிற்சித்தாள் – 17.1 "தோரணம் முழுமையாக்குவோம் அலங்கரிப்போம்"

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்**
1. சுதந்திரமாகப் படங்கள் வரைந்து நிறம் அளிக்க இயல்கிறது (5).
2. பொருட்களைப் பயன்படுத்தி (இயற்கையிலிருந்து கிடைப்பவை / தேவையற்ற பொருட்களைப் பயன்படுத்தி விளையாட்டுப் பொருள்கள், வேடிக்கைப் பொருட்கள், கொளாஷ்) போன்றவற்றை உருவாக்கும் செயல்பாடுகளில் ஈடுபடவும் முடிகின்றது (84).

**கருத்து**
- குழந்தைகள் தின விழா தொடர்பாக மழலையர்ப்பள்ளியையும் சுற்றுப்புறத்தையும் அலங்கரிப்பதுண்டு.

**கருவிகள்**
- கிரையான்ஸ்.

**சூழல்**
- குழந்தைகள் தினத்தையொட்டி பல நிகழ்ச்சிகளைக் குறித்துள்ள கலந்துரையாடல், பாடல்கள் போன்றவற்றிற்குப் பிறகு.

**செயல் வரிசை**
- பாடல்

"நேரு மாமாவைப் பாருங்கள்
தலையில் தொப்பி
கோட்டில் பூ
குழந்தைகள் என்றால் உயிர்.
அவர்களைக் கண்டால் வந்திடுவார்.
கட்டி அணைத்து முத்தமிடுவார்.
என்னே சுவை முத்தத்திற்கு!
தோரணங்கள் தொங்கவிட்டு
கொடிகள் பல உயர்த்தியும்
கொண்டாடுவோம் பிறந்த நாளை
நேரு மாமாவின் பிறந்த நாளை

குழந்தைகள் தினம் நமது தினம்
கொண்டாடுவோம் பிறந்த நாளை
நேரு மாமாவின் பிறந்த நாளை.

பயிற்சித்தாள் 17.1 – தோரணங்கள் முழுமையாக்குவோம் அலங்கரிப்போம் வழங்குதல்.

படவாசிப்பு

- படங்களில் என்னென்ன?
- தகுந்த இலைகளை வரைந்து இணைத்து வண்ணம் தீட்டுதல்.
- இலைகள் சேகரித்து தோரணம் தயாரித்து அலங்கரித்தல்.

## மதிப்பீடு

- படங்களை உற்றுநோக்கி விளக்கங்கள் கூற இயல்கிறது. தகுந்த இலைகளை வரைந்து இணைத்து ஏற்ற வண்ணங்கள் அளிக்க இயல்கிறது.

# மையக் கருத்து 18 பறவைகள்

இந்த அலகை ஆசிரியர்களே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். பறவைகள் என்ற மையக்கருத்தோடு தொடர்புடைய செயல்பாடுகள் திட்டமிட்டு செயல்படுத்தி வெளியிடப்பட்ட விளக்கங்கள் 'பொம்மை' யில் (பக்கம் 169–177) தரப்பட்டுள்ளது. முன் அலகுகளில் தரப்பட்டுள்ள செயல்பாடுகளின் மாதிரியில் வளர்ச்சி மண்டலங்கள், திறன்கள், கருத்துகள் போன்றவற்றிற்கு ஏற்ப தகுந்த பயிற்சித்தாள்களை ஆசிரியர்களே சுதந்திரமாகத் தயாரிக்கலாம். வேறுபட்ட மாதிரிகைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## பயிற்சித்தாள் – 18.1 உருவாக்குவோம் இரசிப்போம்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**
1. இரு பரிமாண, முப்பரிமாணங்களின் வாயிலாகக் கருத்துகளை உருவாக்க இயல்கிறது (87).
2. பொருட்களைப் பயன்படுத்தி (இயற்கையிலிருந்து கிடைப்பவை/ தேவையற்றப் பொருட்கள், வேடிக்கைப் பொருட்கள், கூட்டுப் பொருட்கள் (கொளாஷ்)) போன்றவற்றை உருவாக்கும் செயல்பாடுகளில் ஈடுபடவும் இயல்கிறது (84).

**கருத்து**
- நம்மைச் சுற்றிலும் பல வித பறவைகள் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், பசை

**சூழல்**
- கதை கூறிய பிறகு பயிற்சித்தாள் வழங்குதல்.

**செயல் வரிசை**
- மாதிரியில் தரப்பட்டுள்ள பறவைகளின் உருவங்களை உருவாக்குதல் (மயில், பென்குயின்) பொம்மை பக்கம் (237, 238).

பயிற்சித்தாள் 18.1 – 'உருவாக்குவோம் இரசிப்போம்' வழங்குதல்.

உருவாக்கிய பறவைகளை பயிற்சித்தாளில் ஒட்டுதல்.

## மதிப்பீடு

- காகிதத்தை மடித்தும் – வெட்டியும் பறவைகளின் உருவங்களை உருவாக்க இயல்கிறது.

## மையக் கருத்து 19 பிராணிகள், ஊர்வன

வீட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளம் பிராணிகள் உள்ளன என்றும் அவைகளின் பெயர்கள் என்னென்னவென்றும் பிரித்தறிந்து கூற குழந்தைகளுக்கு இயல வேண்டும். ஊர்வனவற்றில் சில பொந்துகளில் வசிக்கின்றன என்றும் சில உயிரினங்களும் ஊர்வனவும் நமக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன என்றும் குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர். தேனீ, வண்ணத்துப்பூச்சி, எறும்பு போன்ற உயிரினங்கள் நமக்கு நன்மை செய்கின்றன என்றும் கண்டறிகிறார்கள். வடிவத்திலும் நிறத்திலும் அளவிலும் பிராணிகளுக்கும், ஊர்வனவற்றிற்குமுள்ள வேற்றுமைகளை ஒப்பிட்டு பிரித்தறிந்து கூற இயல்கிறது.

### செயல்பாட்டு வரிசை

1. குனிந்தும், ஊர்ந்தும் உடல் இயக்கத்தை ஊக்கப்படுத்தும் முறையில் கதை கூறுதல். அதற்கு ஏற்றாற்போல் பிராணிகள், ஊர்வன போன்றவைகளின் அசைவுகளைப் போலச் செய்தல்.

↓

2. வரிசைப்படுத்தி வைத்துள்ள நாற்காலிகளின் அடிப்பகுதி வழியாக செல்லுதல்.

↓

3. கயறின் பக்கவாட்டாக வரைதல் – கயிறை மாற்றிய பிறகு தலை வரைந்து இணைத்தல்.

↓

4. இயற்கையை உற்று நோக்கி நடத்தல் – பார்த்த பிராணிகளைப் பற்றிக் கூறுதல்.

↓

5. தனது அனுபவங்களைக் கூறுதல் (கொசு, ஈ. எறும்பு).

↓

6. எறும்புப் பாடல் (212) நடிப்பு.

↓

7. ஊதி விடும் படங்கள் உருவாக்கல் (Blow Picture) (மண்புழு).

↓

8. மண்புழு பாடல் (214).

↓

9. சிலந்தி வலை – காணொளி காணல், கலந்துரையாடல்.

↓

10. பயிற்சித்தாள் 19.1 “பொந்தில் யாரெல்லாம்?” வழங்குதல்.

↓

11. அட்டை/ஓணான்/ஈ/மூட்டை – விடுகதைகள் கூறுதல்.

↓

12. பிராணிகள், ஊர்வன வகைப்படுத்துதல்.

↓

13. பல்லிப்பாடல் (215)

↓

14. வண்டுகளைப் போல ரீங்காரமிடுதல், ரீங்காரம் கேட்கும்போது நாம் ஆடுதல்.

↓

15. பூக்களைக் காப்பாற்றிய வண்டும் தேனீயும் (அங்கணப்பூமழை)

↓

16. விரல் நுனிப் படம்.

↓

17. கணிதப் பாடல்கள்
    ஒரு மஞ்சள் வண்ணத்துப் பூச்சி
    தேன் குடிக்க வந்தது.

ஒன்றும் கூட பறந்து வந்தால்
இப்போது எண்ணிக்கை எத்தனை?

↓

18. கதைப்பாடல்கள் கேட்டல் (ஆடியோ)

↓

19. வாய்த்தாரைகள் கேட்டல் – சேர்ந்து பாடுதல்.

↓

20. பொருட்களையும் எண்ணின் எழுத்து வடிவத்தையும் பொருத்தப் படுத்துதல் (1 முதல் 3 வரை).

↓

21. பிராணிகள், ஊர்வன போன்றவற்றின் படங்களைத் திரட்டுதல், ஒட்டுதல்.

↓

22. பயிற்சித்தாள் 19.2 – “வழிகாட்டுங்கள்” வழங்குதல்.

↓

23. வீட்டின் உள்ளே காணப்படும் உயிரினங்கள், வீட்டின் வெளியே காணப்படும் உயிரினங்கள் போன்றவற்றை வகைப்படுத்தி படத் தொகுப்பாக்குதல்.

## பயிற்சித்தாள் – 19.1 ‘பொந்தில் யாரெல்லாம்’

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவுசார் வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**

1. சுற்றுப்புறங்களிலுள்ள பொருட்கள், நிகழ்வுகள், தன்னுடைய அனுபவங்கள், நிலைமைகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகளைத் தன் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் ஒன்றோடொன்று தொடர்புபடுத்திக் கூற இயலும் (22).
2. ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள்/ உயிரினங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி சிறப்பியல்புகளைக் கண்டு பிடிக்கவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (நிறம், அளவு, வடிவம், மணம், ஒலி, சுவை, பளபளப்பு) (30).

**கருத்துகள்**
- ஊர்வனவற்றில் சில பொந்துகளில் வசிக்கின்றன.
- வடிவத்திலும் நிறத்திலும் அளவிலும் பிராணிகளுக்கும், ஊர்வனவற்றிற்கும் வேறுபாடுகள் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், பென்சில்

**சூழல்**
- பறவை கூடு கட்டுவது, சிலந்தி வலை பின்னுவது போன்றவற்றின் காணொளியைக் காட்சிப்படுத்திய பிறகு.

**செயல் வரிசை**

கதைக்கூற்று
- ‘கூடு கட்ட வேண்டும்’, காகம் குச்சிகளும் நார்களுமெல்லாம் கொத்தி எடுத்து பறந்து வந்து மரத்தின் மேலே அமர்ந்தது.
  பொந்தில் இருந்த கிளி கேட்டது: “இவ்வளவு சிரமப் பட வேண்டுமா? எனது கூட்டில் முட்டை போட்டால் போதாதா?” “அது சரி தான்” காகத்திற்கும் தோன்றியது. எல்லா கிளிகளுக்கும் ஒரு கூடு. அனைத்து கிளிகளும் அந்தப் பெரிய மரப்பொந்தில் வந்து முட்டையிடத் தொடங்கின. பொந்து நிறைந்தது. “எனக்கும் முட்டை இட வேண்டும். இடம் உண்டா என்று பார்க்கட்டும்.” ஒரு பறவையும்

கூட வந்தது. புதிதாக வந்த விருந்தினரைக் கண்டு கடந்தை கூறியது: "கூட்டில் முட்டை போட வேண்டுமானால் ஒரு ஊசி போட வேண்டும். நானொரு ஊசி தருகிறேன். 'கடந்தை பறந்து வந்து ஒரு கொட்டு கொட்டியது. முட்டை போட வந்த கொட்டுப்பட்ட நண்பன் வளைந்து நெளிந்து ஓடியது. ஒரு பொந்தில் ஏறியது. விருந்தினர் யார் என்று தெரிய வேண்டாமா?

பயிற்சித்தாள் 19.1 – "பொந்தில் யாரெல்லாம்?" வழங்குதல்.

- புள்ளிகளை இணைத்தல்
- விருந்தினர் யார் என்று கூறுதல்.

- படவாசிப்பு
  - படத்தில் என்னவெல்லாம்?
  - என்னென்ன பிராணிகள்?
  - ஊர்வன எவையெவை?
  - பாம்பிடமிருந்து தப்பிக்க எலிகள் என்ன கூறியிருப்பார்கள்?

ஆசிரியைக்கு

- நிறம், அளவு, வடிவம், ஒலி போன்றவற்றிற்குத் தகுந்த கேள்விகள் கேட்க வேண்டும்.

## மதிப்பீடு

- உயிரினங்களின் பெயர் கூற இயல்கிறது.
- ஊர்வனவற்றையும் பிராணிகளையும் புரிந்துக்கொண்டு கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் 19. 2 – வழி காட்டுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**
- முன் எழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் (13).
- மற்றொன்றாகப் பாவித்து பொம்மை நாடகம், பாத்திர நடிப்பு; வேடமணிந்து விளையாடுதல் போன்ற சூழல்களில் நடிக்க இயல்தல்.

**கருத்து**
- வீட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளம் பிராணிகள் உள்ளன. அவற்றின் பெயர்களைப் புரிந்து கொள்கின்றனர்.

**கருவிகள்**
- பிராணிகளின் கட்அவுட்டுகள்

**சூழல்**
- பிராணிகள், ஊர்வன போன்றவற்றின் படங்களைத் திரட்டும் செயல்பாட்டிற்குப் பிறகு.

**செயல் வரிசை**
- கதைக்கூற்று

**திரைக்கதை**

**காட்சி – 1**

வீட்டின் திண்ணையில் இரவில் தனியாக இருக்கும் குழந்தை, அருகிலுள்ள பூந்தோட்டத்திலிருந்து ஏதோ பறந்து வருகிறது. குழந்தை பார்க்கிறது. பறந்து வரும் உயிரினம் நன்றாக மின்னுகிறது.

குழந்தை : (பிராணியிடம்) ஹாய்...." மின்னும் பிராணியே மின்னும் பிராணியே நீ யார்?

பிராணி : 'நான் தான் மின் மினிப்பூச்சி" (வரைந்து பெரிதாக்கிய பிறகு மின்மினியை வெட்டியெடுத்து பின்னணியில் காட்டலாம். யாராவது ஒலி அளித்தால் போதும்).

குழந்தை : உன் வீடு எங்கே?

மின்மினி : உன் வீட்டின் பின்புறமுள்ள பொட்டல் காட்டிலும் உன் பூந்தோட்டத்திலும் நான் வசிப்பதுண்டு.

குழந்தை : மின்மினியே, உன் பின்னால் வேறு ஒருவரும் பறந்து வருகிறாரே.

மின்மினி : அது வண்டுதான்.

வண்டு : (வண்டின் கட்அவுட் பேசுவது போல அசைத்துக் கொடுக்கலாம்). குழந்தாய், நானும் உன் வீட்டின் அருகே வசிப்பவன் தான் சரி போகட்டுமா?"

குழந்தை : டாட்டா (வண்டை நோக்கி கை வீசுதல்) குழந்தை வீட்டுற்குள் செல்ல எழும்பும்போது வண்ணத்துப் பூச்சியைப் போன்ற ஒரு உயிரினம் டியூப் லைட்டின் அருகில் வந்து அமர்ந்தது.

குழந்தை : இதோ ஒரு வண்ணத்துப்பூச்சி, இரவிலும் வண்ணத்துப் பூச்சிகள் வருமா அம்மா...? (உள்ளே பார்த்துக் கொண்டு உரக்கக் கேட்டாள். இந்த நேரத்தில் பின்னணியில் குழந்தையின் சத்தமும் திரையில் இரவில் வரும் அந்துப் பூச்சியின் படமும் வேண்டும்.)

இரவு வண்ணத்துப்பூச்சி : (கட்அவுட்டு பேசுதல்) குழந்தாய், பார்க்க வண்ணத்துப்பூச்சி போல தோன்றினாலும் நான் அந்துப்பூச்சி தான். இரவில் வரும் அந்துப்பூச்சி நாங்கள் தான். இந்த வெளிச்சத்தில் நான் கொஞ்ச நேரம் இருக்கட்டுமா?

குழந்தை : இருங்க இருங்க (உள்ளே ஏறிப் போகிறாள்).

**காட்சி – 2**

குழந்தை உள்ளே வந்தாள். கட்டிலில் படுக்கப்போகும் போது கொசுக்களின் ரீங்காரம் கேட்கிறது. (கொசுக்களைக் காட்ட வேண்டாம். ரீங்காரம் மட்டும் பின்னணியில். குழந்தை காதைப் பொத்துகிறது.)

குழந்தை : "ஐயோ! நீங்க வந்திட்டீர்களா? இன்று என் இரத்தத்தைக் குடிக்கக் முடியாது. கொசுக்களே. நான் கொசு வலைக்குள்தான் படுப்பேன்." (சொல்லிக் கொண்டே குழந்தை கொசு வலைக்குள் ஏறி படுக்கிறது).

குழந்தை : குட்னைட் (குழந்தையின் முகமும் புன்னகையும் மட்டும் திரையில்). எல்லா உயிரினங்களும் வீட்டிலிருந்து. வெளியே பறந்து செல்கிறது. பறந்து சென்ற வழியைப் பாருங்கள்.

- பயிற்சித்தாள் 19.2 – 'வழி காட்டுங்கள்' வழங்குதல்.
  - ஒவ்வொரு உயிரினமும் எவ்வாறு பறந்து சென்றது?
  - காற்றில் கைவிரலினால் வரையுங்கள்.
  - புள்ளிகள் வழியாக வரைதல்.

ஆசிரியைக்கு : (இது ஒரு சிறிய திரைக்கதை ஆகும். வகுப்பறையில் உள்ள குழந்தைகளை வைத்து

படமாக்கலாம். ஐ.சி.டி பயன்படுத்தி காட்சிப் படுத்தலாம். பெற்றோர்களைக் கண்டு படமாக்கலாம். இல்லையென்றால் திரைக்கதையை, கதை போல வகுப்பில் வாசிக்கலாம்.)

## மதிப்பீடு

- பிராணிகள் பறந்து சென்ற வழியைப் புள்ளிகள் வழியாக வரைய இயல்கிறது.
- உயிரினங்களைப் பிரித்தறிந்து கூற இயல்கிறது.

## மையக் கருத்து 20 ஆடைகள்

பல வித ஆடைகளின் பயன்களைக் குறித்தும் ஆடை அணியும் முறைகளைக் குறித்தும் குழந்தை அறிவு பெற்றிருக்க வேண்டும். காலநிலைக்குத் தகுந்த ஆடைகளையும் வயதிற்கு ஏற்ப அணிய வேண்டிய ஆடைகளையும் குறித்துள்ள அறிவு சிறு வயதிலேயே கிடைத்திருக்க வேண்டும். பலவகையான ஆடைகளும் அவற்றின் பயன்களோடு தொடர்புள்ள செயல்பாடுகளுந்தான் இந்த மையக்கருத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

### செயல்பாட்டு வரிசை

1. காகிதம், துணி மடித்தல்.

↓

2. உற்று நோக்கி தனித்தன்மைகள் கூறுதல் (பல வகைத் துணிகள்).

↓

3. ரிப்பன், துணிகள் பல முறைகளில் அளந்து பார்த்தல்.

↓

4. காகிதம், தேவைக்கேற்றவாறு கிழித்து ஒட்டுதல்.

↓

5. பளபளப்பானதும் சொர சொரப்பானதுமான துணிகளைப் பிரித்தறிந்து கூறுதல்.

↓

6. துணிகள்/ஆடைகளில் உள்ள அடுக்குகள்.

↓

7. பயிற்சித்தாள் 20.1 ஆடை வரைவோமா? அளித்தல்.

↓

8. ஆடை கழற்றுதல், அணிதல்.

↓

9. கதை அமைத்துக் கூறுதல்.

↓

10. இயல்பான உரையாடல் (அணியும் ஆடைகள்).

↓

11. தொடர்புள்ளவையைக் கண்டுபிடித்தல்.

↓

12. தனது ஆடைகளை மடித்தல்.

↓

13. விழாக்கள், ஆடைகள் இவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளைக் கண்டறிந்து கூறுதல்.

↓

14. துணிகளின் தனித்தன்மைகளைக் கண்டறிந்து ஒற்றுமை வேற்றுமை கூறுதல் (படம்).

↓

15. சட்டையின் பொத்தான்களைக் கழற்றுதல் அணிதல், சிப் அணிதல்.

↓

16. பயிற்சித்தாள் 20.2 விடுபட்டதை வரைந்து இணையுங்கள்.

↓

17. துணி கொளாஷ்

↓

18. ஆடைகளின் முறையான பராமரிப்பு (இயல்பான கலந்துரையாடல் - சலவை செய்தல், ஆடை தேய்த்தல், உலர வைத்தல்).

↓

19. யாருக்குப் பொருந்தும்? விளையாட்டு (பல வயதினர் அணியும் ஆடைகள்/படங்களைப் பயன்படுத்தி).

↓

20. காணொளி - வெவ்வேறு காலங்களில் அணியும் ஆடைகள்.

↓

21. அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளுதல் (துணி வேகமாக உலரும் நேரம்).

↓

22. பயிற்சித்தாள் 20.3 'யாருடைய அழுகை?' வழங்குதல்.

↓

23. நடிப்பு - துணி சலவை செய்வதோடு தொடர்புடைய செயல்பாடுகள்.

↓

24. துணியைச் சோப்பு பயன்படுத்திச் சலவை செய்தல் - உலர வைத்தல். (உள்ளே, வெளியே) மூழ்குமா மிதக்குமா? பல வித துண்டுத்துணிகளை உற்று நோக்கிக் கூறுதல் - கலந்துரையாடல்.

↓

25. பசை தேய்த்து படம் உருவாக்குதல். அதில் நூல் ஒட்டுதல்.

## பயிற்சித்தாள் - 20.1 ஆடை வரைவோமா?

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**
1. கணித அடுக்குகளைக் காட்சிக்கு வைத்து அழகாக ஒழுங்கமைக்க இயல்கிறது (42).
- சுதந்திரமாக படங்களுக்கு நிறம் அளிக்க இயல்கிறது (5).

**கருத்து**
- பலவித ஆடைகள் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், கிரையான்ஸ், துணிகள், ஃபாப்ரிக் பெயின்ட், ஸ்போஞ், காய்கறிகள்.

**சூழல்**
- துணிகள்/ஆடைகளில் உள்ள அடுக்குகள் கண்டறியும் செயல்பாட்டிற்குப் பிறகு.

**செயல்வரிசை**

துணியில் பார்த்தது போன்ற படங்களும் பூக்களும் நாமே தயாரிக்கலாமா?

- ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு துண்டுத் துணிகள் வீதம் அளித்தல்.
- காய்கறி அச்சுக்கான பொருட்கள்.
- ஆசிரியை செய்து காட்ட வேண்டும்.
- தேவைக்கேற்ப அறிவுரைகள் கொடுத்தல்.
- குழந்தைகள் துணியில் அச்சடித்தல்.
- காட்சிப்படுத்துதல்.

பயிற்சித்தாள் 20.1 ஆடை வரைவோமா? வழங்குதல்.

படத்திலுள்ள மனித உருவத்திற்குத் தகுந்த ஆடைகளை வரையுங்கள். கொடியில் தொங்க விடப்பட்டுள்ளவைகளைத் தேர்ந்தெடுக்கலாம். (ஆடையின் படங்களை வரையத் தெரிந்தவர்கள் வரையட்டும். தெரியாதவர்கள் இணைக்கட்டும்).

## மதிப்பீடு

- தகுந்த ஆடைகளைப் பிரித்தறிந்து வரைந்து இணைக்கப்பட்டுள்ளது.
- துல்லியமாக வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் 20.2 - விடுபட்டதை வரைந்து இணையுங்கள்

**வளர்ச்சி மண்டலம்**
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்**
- 1 முதல் 5 வரையுள்ள எண்களை எண்ணவும் எண்கள், பொருட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை ஒன்றோடொன்று தொடர்பு படுத்தவும் இயல்கிறது (44).

**கருத்து** • பலவித ஆடைகள் உள்ளன.

**கருவிகள்** • பயிற்சித்தாள்.

**சூழல்** • சட்டையின் பொத்தானைக் கழற்றுதல்; அணிதல் செயல்பாட்டிற்குப் பிறகு.

**செயல்முறை**

அம்முவும் அம்மாவும் தையல்கடைக்கு வந்தனர்.
“சட்டை தைத்து முடிந்ததா?” அம்மா கேட்டார்.
‘‘பொத்தான் தைக்க வேண்டும். உடனே தருகிறேன்”
“ஹாய் எத்தனை சட்டைகள்!”
கண்ணாடி அலமாரியில் தொங்க விடப்பட்டுள்ள சட்டைகளை அம்மு கவனமாகப் பார்த்தாள். இனியும் பொத்தான்கள் தைக்க வேண்டும். நாமும் தையல் தைப்பவருக்கு உதவுவோம்.

பயிற்சித்தாள் 20.2 – “விடுபட்டதை வரைந்து இணையுங்கள்” வழங்குதல்.

படவாசிப்பு
- அலமாரியில் ஒன்றாம் தட்டில் தொங்கவிடப்பட்டுள்ள முதல் சட்டையில் எத்தனை பொத்தான்கள் உள்ளன?
- இரண்டாவது சட்டையில் இனி எத்தனை வேண்டும்?
- இரண்டாம் தட்டில் எத்தனை சட்டைகள்?
- முதல் சட்டையில் எத்தனை பொத்தான்கள் வேண்டும்?
- மூன்றாம் தட்டின் முதல் சட்டையில் எத்தனை பொத்தான்கள்?
- சம எண்ணிக்கை பொத்தான்களை அடுத்த சட்டையில் வரையுங்கள்.
- இவைகளில் நீங்கள் அணியும்/விருப்பமுள்ள ஆடைக்கு வண்ணம் தீட்டுங்கள். வண்ணம் தீட்டப்பட்ட ஆடையைக் குறித்து ஒரு பாட்டு பாடுங்கள்.

• பாடல்

“நீல வண்ண ஆடை ஆஹா
நீல வண்ண ஆடை
வானின் வண்ணம் நீலம் – அதனால்
அந்த வண்ணம் எனக்கு விருப்பம்.
புள்ளி போட்ட ஆடை ஆஹா
புள்ளி போட்ட ஆடை
அழகான புள்ளி போட்ட ஆடை
எனது புள்ளி போட்ட ஆடை
பச்சை வண்ண ஆடை ஆஹா
பச்சை வண்ண ஆடை
எனக்குத் தானே அந்தப் பச்சை வண்ண ஆடை”

இதைப் போன்று ஆடைகளைக் குறித்து குழந்தைகள் பாடட்டும்

## மதிப்பீடு

- பொத்தான்களைச் சரியாக எண்ணிக்கூற இயல்கிறது.
- இனி எத்தனை பொத்தான்கள் வேண்டும் என்று துல்லியமாக வரைந்து இணைக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் 20.3 - யாருடைய அழுகை?

**வளர்ச்சி மண்டலம்** • உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** : சுதந்திரமாக படங்கள் வரைந்து நிறம் அளிக்க இயல்கிறது (5).

**கருத்து** • ஆடைகளின் பயன்கள் - உடலை மறைக்க, சூடு, குளிர் போன்றவற்றிலிருந்து பாதுகாக்க.

**கருவிகள்** • பயிற்சித்தாள், பென்சில், கிரையான்ஸ்

**சூழல்** : வெவ்வேறு காலங்களில் அணியும் ஆடைகளின் காணொளிக் காட்சியைப்பயன் படுத்திய பிறகு.

### செயல்முறை

- கதைக்கூற்று : ஒரு பான்டு தனியாகக் கொடியில் தொங்கவிடப்பட்ட நிலையில் அழுது கொண்டே இருந்தது. அப்போது அந்த வழியாக ஒரு புலி வந்தது. க்ர்ர்...... க்ர்ர்..... க்ர்ர்.... புலி உறுமியது. பான்டு அழுகையை நிறுத்தவே இல்லை. புலி ஒரு ஆப்பத்தைக் கொடுத்துப் பார்த்தது. அழுகை நிற்கவே இல்லை. சாக்கலேட்டு கொடுத்துப் பார்த்தது. இல்லை இல்லை அழுகை நிறுத்தவே இல்லை. இனி என்ன செய்வது? ‘‘என்னை எடுத்து அணிந்தால் தான் அழுகையை நிறுத்துவேன்.” பான்டு கூறியது.

  புலியின் வேடம் அணிந்த குழந்தை, அல்லது புலியாக ஒரு குழந்தை வருகிறது. (கதைக்குப் பிறகு)

- நடிப்பு : பான்டு அணிதல், கொஞ்சம் பெரிய பான்டு ஆகலாம். அப்போது தான் குழந்தையின் ஆடைக்கு மேலே அணிய முடியும்.

- கதை தொடர்கிறது.

  புலி பான்டு அணிந்தது. ‘‘சரி போகலாம்’’. பான்டு மகிழ்ந்தது. அது சிரிக்கத் தொடங்கியது. பாட்டு பாடவும் தொடங்கியது. அப்போது மீண்டும் அழுகை ‘‘நீ அழுகை நிறுத்தவில்லையா?” புலிக்கு கோபம் வந்தது. ப்றி.... க்றி.... . மீண்டும் அழுகை. “நானல்ல. அது டீஷர்ட்” பான்டு கூறியது. “டீஷர்ட்டா? அது யார்?” “அதோ......” பான்டு சுட்டிக்காட்டியது. ஒரு கொடியில் தனியாக ஒரு டீஷர்ட் தொங்கியபடி அழுகிறது. “என்னையும் அணிந்து கொள். அது உரக்கச் சொன்னது. தொந்தரவாச்சே. புலி டீஷர்ட்டையும் அணிந்தது.

நடிப்பு : (குழந்தை டீஷர்ட்டைக் கொடியில் இருந்து எடுத்து அணிதல்.)

- கதை தொடர்கிறது

  அவர்கள் நடக்கத் தொடங்கினர். நடந்து கொண்டே டீஷர்ட்டும் பான்டும் பாட்டு பாடத் தொடங்கினர். “பேசாமல் இரு..... க்ர்ர்.... க்ர்ர்.....” புலி அதட்டியது. அப்போது அங்கே மீண்டும் ஒரு அழுகை. “யார் அழுகிறது.” புலி கேட்டது. ‘நான் தான்’ ஒரு பாவம் தொப்பி. சாலையில் விழுந்து விட்டேன். “என்னையும் தலையில்

அணிவீர்களா? தொப்பி புலியிடம் கேட்டது. ச்செ! தொந்தரவாச்சே! புலி கூறியது. ‘‘அணிந்து கொள்ளுங்கள் அணிந்து கொள்ளுங்கள்’’ – டீஷர்ட்டும் பான்டும் சொன்னது. புலி தொப்பியையும் அணிந்து ஒய்யாரமாய் நடக்கத் தொடங்கியது.

நடிப்பு : குழந்தை தரையில் இருந்து தொப்பியை எடுத்து அணிதல்.

- கதை தொடர்கிறது

அப்போது அங்கே ஒரு குழுப் பாடல்:
“பான்டு அணிந்து நடந்தாலே
கால்கள் இரண்டும் மறைக்கலாமே
டீஷர்ட்டு அணிந்து நடந்தாலே
உடலைப் பாதி மறைக்கலாமே
தொப்பி வைத்து நடந்தாலே
தலைமுடி முழுவதும் மறைக்கலாமே”
புலியும் அப்பாடலைச் சேர்ந்து பாடியது.

பாடி முடிந்ததும் அனைவரும் கல கலவெனச் சிரித்தனர். அப்போது அங்கே மீண்டும் அழுகை. ஆனால் யாரையும் காணவில்லை. எங்கிருந்து அழுகைக் குரல் கேட்கிறது? எல்லோரும் பார்த்தனர். அங்கும் இங்கும் பார்த்தனர். “அதோ! ஒரு குழந்தை அங்கிருந்து அழுகிறது.” என்ன நேர்ந்தது?” புலி கேட்டது. “என்னுடைய பான்டு காணவில்லை”. “எனது டீஷர்ட்டும் காணவில்லை.” எனது தொப்பியும் காணவில்லை.”

நடிப்பு : குழந்தை அழுவதைக் காண்பிக்க வேண்டும். பிறகு புலி கதையில் கூறுவதைப் போலச் செய்ய வேண்டும்.

- கதை தொடர்கிறது.

புலி பான்டைக் கழற்றியது.
“இது தானா உன் பான்டு?”
“ஆமாம், குழந்தை பான்டை வாங்கி அணிந்தது.
“இது தானா உன் டீஷர்ட்?” புலி ஷர்ட்டைக் கழற்றியது.
‘‘ஆமாம்’’, குழந்தை டீஷர்ட்டை வாங்கி அணிந்தது.
“இது தானா உன் தொப்பி?”
“ஆமாம்.” குழந்தை தொப்பியையும் வாங்கி அணிந்தது.
எல்லாம் கிடைத்த போது புலியை ஒரு கணம்கூடப் பார்க்காமல் குழந்தை ஓட்டம் பிடித்தது.

நடிப்பு : ஓடுகின்ற குழந்தை, வருத்தத்துடன் நிற்கும் புலி, ஓட்டத்தைப் பார்த்து கைதட்டும் குழந்தைகள்.

- கதை தொடர்கிறது

பாவம் புலி! அதற்கு எதுவும் பேசக்கூட முடியவில்லை. அப்போது டீஷர்ட்டும், பான்டும் தொப்பியும் ஒரு அழுகைக்குரல் கேட்டன. க்ர்ர்... ப்றி... க்றி...... அவர்கள் செவி சாய்த்தனர். யாருடைய அழுகை இது?

அழுகை நிற்கவே இல்லை. அழுது அழுது புலியின் உடம்பிலுள்ள பல கோடுகளும் அழிந்து விட்டன. அழுகையை நிறுத்த என்ன வழி? புலியின் மேலே கோடுகள் வரைவோமா?

பயிற்சித்தாள் 2-.3 – “யாருடைய அழுகை?” வழங்குதல்.

புலியின் உடம்பில் கோடுகள் வரைதல். சின்ன உடைக்கு வண்ணம் தீட்டுதல்.

கதைக்கூற்று (தொடர்ச்சி) : இப்போதும் புலி அழுகையை நிறுத்தவில்லை. ஒரு வழி உள்ளது. புலியிடமிருந்து டீஷர்ட்டைக் கழற்றி வாங்கிய குழந்தையின் ஷர்ட்டிலும் புலியின் கோடுகளை வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள். அவ்வாறு அது புலியின் சட்டையாக மாறட்டும். பான்டிலும் தொப்பியிலும் வரையுங்கள். அப்போது புலி மகிழ்ச்சி அடையும்.

ஆசிரியைக்கு : குழந்தைகளுக்கு நடிப்பதற்கான சூழல்களில் அதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டும்.

## மதிப்பீடு

- புலியின் உடம்பில் உள்ளது போன்ற கோடுகளை வரைக்க இயல்தல்.
- வண்ணம் தீட்ட இயல்தல்.